## ஈழகேசரி இளைஞர் சங்கம்

அன்பார்ந்த குழந்தைகாள்!

சென்றவாரம், கதைகள் கட்டுரைகளுக்கு ஒரு பரிசு கொடுக்கத் தீர்மானித்திருக்கிறேன் என்று நான் ஒரு போடு போட்டேன் பாருங்கள்? முன்னொருபோதும் எழுதியிராத பல குழந்தைகள் இப்போது தங்கள் கைவரிசைகளைக் காட்ட ஆரம்பித்துவிட்டார்கள்! இது சந்தோஷத்துக்குரிய சமாச்சாரமல்லவா? ஆனால், இன்று அல்லது நாளை பரிசு கிடைக்குமா என்று பலர் விசாரிக்கின்றனர். ஒரு மாதம் செல்ல வேண்டாமா? ஆகையால் பிரதிமாதமும் 15-ந் தேதிகளில் கட்டுரை கதைகளைப் பரிசீலனை செய்துபார்த்து அவைகளில் திறமையானதற்குப் பரிசு கொடுக்கப்படுமென்பதைத் தெரிவிக்கிறேன்.

பெண் குழந்தைகள் நமது சங்கத்தில் அவ்வளவு அக்கறை கொள்ளுகின்றார்களில்லையென்று நான் சென்றவாரம் எழுதியது ஒரு பேத்திக்கு மூக்கு முட்டிய கோபத்தை வருவித்திருக்கிறது! "நாங்களென்ன அப்படி விட்டில் பூச்சிகளா?" என்று இவர் ஆத்திரத்துடன் கேட்கிறார். இன்னொரு பேத்தி தனக்கு வெட்கமாயிருக்கிறதாம் கடிதமெழுதுவதானால்! இவர்களைப் பற்றியெல்லாம் நான் என்னதான் சொல்லட்டும்! இந்த வாரம் உங்களுக்கெல்லாம் என்ன துணிவு வந்து எழுதினீர்கள் அம்மாமாரே? என்றுதான் விசாரிக்க வேண்டும்.

போகட்டும், எல்லாரும் நல்லபிள்ளைகள்தான். தாத்தா உங்களையெல்லாம் ஆசீர்வதிக்கிறார்.

* * * *

எல்லாப்பாடசாலைகளிலும் அநேகமாக இப்போது விடுமுறை நாட்கள் ஆரம்பமாகியிருக்கின்றன. பொறுத்த வெயிற்காலமாதலால் நீங்களெல்லாரும் தடிமல் வியாதியைத் தேடிக்கொள்ளாதீர்கள். வீட்டிலேயிருந்து ஏதாவது உபயோகமான காரியங்களைச் செய்யுங்கள். நான் சொன்ன ஏதாவது பொழுது போக்குகள் மனத்துக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும்.

—தாத்தா.

### தாத்தா பதில்

அ. மகேந்திரன் (கொழும்பு) — உமது கடிதம் மிக வேடிக்கையாயிருக்கிறது, தம்பி! ஆனால் கதையிருக்கிறதே, அதற்குத் 'தலையுமில்லை வாலுமில்லை'! அதனால்தான் பத்திரிகையில் போடவேண்டுமென்று நான் ஆசிரியரிடத்தில் கொடுத்தபோது அவர் இதை என்னவோ ஒரு கூடைக்குள் பத்திரமாக வைத்துவிட்டார்! அடுத்தமுறை அப்பா, அம்மா, அல்லது மாமாவிடம் கேட்டு ஒரு கதை எழுதியனுப்பும் பார்க்கலாம்.

## தொழிற் கல்வி

(329-ம் பக்கத் தொடர்ச்சி)

பிற நாடுகளிலிருந்து வரும் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக உத்தியோகம் பார்க்கலாமென்றும், ஒருபோது உதவி ஆசிரியர்களாக அமர இடங்கொடுக்கப் படமாட்டார்களென்றும் வித்தியாமந்திரிசபை தீர்மானஞ் செய்திருக்கிறது. இலங்கையின் தலைமை ஆசிரியர்களாக இருக்கத் தகுந்தவர்கள் இல்லையா? எதற்காகத் தலைமை ஆசிரியர்கள் பிறநாடுகளிலிருந்து வரவேண்டும். வித்தியா மந்திரிசபையின் நோக்கம் விளங்கவில்லை; உயர்ந்த சம்பளம்பெறும் உத்தியோகத்தைப் பிறநாட்டினருக்குக் கொடுத்துவிட்டுக் குறைந்த சம்பள உத்தியோகங்களை நாட்டிலுள்ளவர்களுக்குக் கொடுக்க முன்வந்த வித்தியாசபையாரின் தீர்மானம் பெரிதும் கண்டிக்கத்தக்கது.

---

க. தங்கம்மா (தெல்லிப்பழை) — நீர் அவசரப்பட்டுக் கடிதத்தை அனுப்பிவிட்டீர். நான் கேட்டால்தானே! ஆனால் அக்கடிதத்தை வைத்திருக்கிறேன். பின் ஒருபோது போட்டி என்று சொல்லும்போது கவனிக்கப்படும். வேறு கடிதமனுப்பவும் உரிமையுண்டு. சரியான சிநேகிதிதான் கிடைத்திருக்கிறீர்.

சரஸ்வதி (?) — ஏனம்மா தாத்தா மீது இவ்வளவு கோபம்? நீர் யார், ஊர் விலாசம் ஒன்றும் தெரிவிக்காமல் விட்டுவிட்டீர்? உமது அபிப்பிராயங்கள் தங்கமானவை.

அ. ஜயேந்திரன் (கொழும்பு) — நீர் பயப்படுவதுபோல் தாத்தா அப்படியொன்றும் செய்துவிடமாட்டார்! கதை நன்றாயிருக்கிறது. அடிக்கடி இப்படி எழுதலாமே? இந்தியாப் பத்திரிகை ஒன்றைப் பின் பற்றுகிறீர் போலிருக்கிறது. பரவாயில்லை, ஆனால் உமது நடைமுறை வாழ்க்கையிலுள்ள சங்கதி நன்றாய்ப் படம்பிடிக்கப்பட்டிருக்கிறது. உமது கடிதம் பிரசுரிக்கப்படுவதற்குச் சந்தர்ப்பம் வரட்டும். விஷயமும் வேடிக்கையாயிருக்க வேண்டாமா? உண்மையான 'தாத்தா' தான் தோற்றமளிப்பார், கவலை வேண்டாம். ஆனால் நீர் நம்புவீரோ என்னவோ என்று தெரியாது!

சி. அரசரத்தினம் (உடுவில்) — உமக்கு நான் சில பிறதேச முத்திரைகளும், உமது கடிதமும் அனுப்பிவிட்டேன். பெற்றுக்கொண்டீரா? வேறு யார் யாரிடம் பழைய முத்திரைகள் சேகரிக்கிறீர்? இந்தியாவில் அடுத்த அடுத்த வாரங்களில் சில விலாசங்கள் பெற்றுத் தருகிறேன். சித்திர முகப்பைக் கைவிட்டாயிற்று. எங்கள் சித்திரகாரரைக் கொண்டுதான் வேலை பார்க்க வேண்டியிருக்கிறது. 'கண்ணன் காட்சி' பிரசுரம் பெறாது.

நடராசா (கட்டுவன்) — உமது சொற்களை நம்புகின்றேன். என்ன செய்வது, எல்லாக் குடும்பங்களிலும் கஷ்டமிருக்கத்தான் செய்யும். பிரதானமாக நமது யாழ்ப்பாணத்தில் அநேக கிராமங்களில் வறுமையும் இடைஞ்சலுமுண்டுதான். முயற்சியை விடலாகாது. அடுத்த வாரம் உமக்கும் சில முத்திரைகள் தருகிறேன். கொஞ்சம்தான் என்னிடம் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது. வேறு நண்பர்களுடன் முத்திரைகள் மாற்றம் செய்யலாம்.

யாழ்ப்பாணம்-மல்லிட்டைதெற்கு "திருமகள்நிலைய" த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னுகம் 'தலையாட்டியி'லுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம் ஆகஸ்ட் 20ஆ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.

Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

# ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றுங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னுகம்: பிரமாதி௵ ஆவணி௴ ௧௧ௗ (27-8-39) { இல. 43

## ஆசிரியர்கள் எதிர்ப்பு

கல்விப் பிரமாணத் திட்டத்தைக் கண்டிக்கும் நோக்கமாகக் கூட்டப்பட்ட வடஇலங்கைத் தமிழாசிரிய சங்கப் பொதுக்கூட்டம் தமிழாசிரிய உலகத்தின் ஒற்றுமையையும், விழிப்பையும் நன்கு வெளிப்படுத்தியுள்ளது. வகுப்பு, சராசரி, சம்பளம் என்ற மூன்று வகையாலும் நாட்டுக்கல்வி பங்கப்படுமென்பது ஆசிரியர்களது மனதிற் பதிந்து விட்டது. இத்திட்டத்தைப்பற்றிக் கல்வி மந்திரியோடு கலந்து பேசுவதற்கு ஏழுபேர் நியமிக்கப்பட்டனர்.

வ. இ. த. ஆ. சங்கம் இலங்கையிலுள்ள பல சங்கங்களோடும் ஒன்று சேர்ந்து மந்திரியைச் சந்தித்துக் கலத்தல் நன்மையைக் கொடுக்கும். இலங்கையில் ஏறக்குறைய ஆறு தமிழாசிரிய சங்கங்கள் இருக்கின்றன. ஆசிரிய உலகத்திற்கு நெருக்கடியான இக்காலத்தில் தனித்தனி ஆசிரியசங்கங்கள் இருப்பதிலும் பார்க்க அகில இலங்கைக்கு ஓர் சங்கம் இருத்தல் அவசியம். சிங்கள நாட்டில் அகில இலங்கைச் சுவபாஷா ஆசிரியர் சங்கம் ஒன்றிருக்கின்றது. சிங்கள ஆசிரியர்களும் தமிழாசிரியர்களும் ஒன்று சேர்ந்து ஓர் தனிச்சங்கம் நிறுவுதல் பெரிதும் விரும்பத்தக்கது. இது விஷயத்தில் வ. இ. த. ஆ. ச. வேண்டிய முயற்சிகளை கையாண்டிருக்கின்றதென்று அறிகிறோம்.

ஆசிரியர்கள் எல்லோரும் வித்தியாசங்கத்தின் பிரதிநிதியாக மேற்படி சங்கப் போஷகர் திரு. இராசரத்தினமவர்களைத் தெரிந்தெடுத்திருக்கின்றனர். உபாத்தியாயர்களுக்கு ஆபத்தான இக்காலத்தில் திரு. இராசரத்தினம் அவர்கள் உபாத்தியாயர்களையும், நாட்டுக்கல்வியையும் காப்பாற்றுவார் என்று எண்ணுகின்றோம்.

### பொதுக்கூட்டப் பேச்சுகள்

திரு. கு. முத்துக்குமாரசாமிப்பிள்ளை

"ஆசிரிய உலகத்துக்கு ஆபத்துவரப் போகின்றது. ஆசிரியர்கள் எல்லோரும் விழிப்பாக இருக்கவேண்டும். வித்தியாசங்கத்தில் இருக்கும் ஆசிரியப் பிரதிநிதிகள் ஆசிரிய உலகத்துக்கு முறையாகக் கடமை பார்க்கிறார்களோ? என்பதை நாம் கவனிக்க வேண்டும். ஆசிரியர்கள் எண்ணத்துக்கு மாறாக அவர்கள் நடந்துகொள்ளாதவாறு தடுக்கவேண்டும். கல்விப்பிரமாணத் திட்டம் நாட்டுக் கல்விக்குத் தீமையை விளைக்கக் கூடியது. தற்கால ஆசிரியர்களையும் வருங்கால ஆசிரியர்களையும் பெரிதும் பாதிக்கின்றது. ஆகையால் ஆசிரியர்கள் இத்திட்டத்தைக் கண்டிக்க வேண்டியது அவசியம். வித்தியாசங்கம் எவ்வகையில் இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டதோ அறியோம். இத்திட்டம் பெரும்பாலும் திரு. குணதிலகாவினுடையதே. உபாத்தியாயர்கள் சம்பளத்தில் சிக்கனஞ்செய்ய முன்வந்த திரு. குணதிலகா வருடமொன்றுக்கு 27000 ரூபா சம்பளம் பெறுகின்றார். அவர் முதலில் தமது சம்பளத்தில் ஏன் சிக்கனம் செய்யக்கூடாது. அவர் ஏன் மாசம் ஒன்றுக்கு 100 ரூபா சம்பளத்தோடு சீவிக்கக்கூடாது."

(தொடர்ச்சி 341-ம் பக்கம் பார்க்க)

# பொய்யா மொழி

[ K. S. கிருஷ்ணன் B. A. ]

பழந்தமிழிலக்கியங்களுள் திருக்குறள் போன்ற மேன்மையுடைய நூல் வேறுயாதொன்றும் இல்லையென்றால் அது புனைந்துரையாகாது. அது மிகப் பழைய நூலாயினும் இன்னும் புதியதாகவே தமிழ் மக்களால் போற்றப்படுவது அதற்குச் சான்றாகும். அந்நூலே நந் தமிழ் மூதாதையரின் அறிவுக்களஞ்சியமாகும். அதிலுள்ள அறிவு எப்பொழுதும் புதியதாய், எத்திறத்தாருக்கும் பொருந்துவதாய், எக்காலத்திலும் பெரியோரால் போற்றக் கூடியதாய்த் திகழ்கின்றது.

அறமுதலாய நான்கு உறுதிப் பொருள்களையும் முப்பாலாக, ஈரடியால் வகுத்துரைக்கும் ஓர் ஒப்பற்ற நூல் திருக்குறள். அந்நூலில் உள்ள உயரிய நோக்கமும், தெள்ளிய மொழிகளும், உலகத்தவர் மனத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. இல்வாழ்வானுக்கும், துறவிகளுக்கும், அரசர்களுக்கும், உழவர்களுக்கும், அமைச்சருக்கும், வாணிபருக்கும், தூதுவருக்கும், காவலாளருக்கும், இன்னும் பல் திறத்தாருக்கும் செவ்விய முறையில் அந்நூல் அறிவுறுத்துகின்றது. எவையெவை விலக்கல் வேண்டும், எவையெவை கைக்கொள்ளல்வேண்டும் என்று, யுத்தி புகட்டுவதில் இது போன்ற நூல் வேறில்லை.

ஒவ்வொரு திருக்குறட் பாவும் அருள் மொழிகளால் ஆக்கப்பட்டு, விழுமிய பொருள் பொதிந்து விளங்குகின்றது. பொருளின் செறிவும் சொல்லின் சீர்மையும், திருக்குறளுக்கேயுள்ள தனிச் சிறப்பு. சொல்லின் தெள்ளமுதத்தினைப் பருகும்பொழுது, இன்சுவைக் கட்டியான பொருள் அவ்வமுதத்தினின்றும் திளைத்து உள்ளத்தை மகிழ்விக்கின்றது.

அவ்வாறு ஒப்பற்றிருக்கும் நூலை உலகத்திற்கு அருளியவர் கருணை வள்ளலான திருவள்ளுவனார் என்பது யாவரும் அறிந்ததே. 'சொல்லினடை தெரிந்த நன்மையவர்' ஆதலால் அவர் எச்சொல் விழுமிய பொருளைப் பயக்குமோ அச்சொல்லையே ஆய்ந்தறிந்து அமைத்திருக்கின்றார். ஒரு சொல்லேனும் வீணாகவாவது, மிகையாகவாவது அவரியற்றிய குறட்பாக்களுள் காணக்கிடைத்திலது.

'நாமறிந்த புலவர்களுள் வள்ளுவர் போல்' மக்களின் அகம், புறமாகிய இவ்விரண்டின் தன்மைகளையும், நிகழ்ச்சிகளையும் அறிந்து சொல்லுபவர் வேறொருவர் இல்லை. அவர் சிறந்த அகநூல் வல்லுநர். மிகச் சிறந்த துறவி. ஒப்பற்ற இராசதந்திரி. தலை சிறந்த வாணிபர். மகா தியாகி. இல்வாழ்வாருள் தலை சிறந்தவர். சிறந்த வைத்தியர். சிறந்த உழவர்.

சிறந்த நண்பர். சிறந்த காதலன்; இணையற்ற காதலி. உற்ற தோழி. வழுவிலா அமைச்சர். இவ்வாறாக எல்லாத் துறைகளிலும் தலை சிறந்த அறிவுள்ளவராக வாழ்ந்தவர் திருவள்ளுவர். அவர் மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கு எவை யெவை யின்றியமையாதவையோ, அவைகளைத் தொகுத்தும் விரித்தும் தந்துளார். ஆகவே, அவர் செய்தருளிய நூலுக்குப் 'பொய்யா மொழி' யென்ற சாலவும் பொருத்தமுடைய பெயரை அறிவுடையோர் சூட்டியுள்ளார்கள்.

# மீண்டும் நரியின் ஏமாற்றம்

அன்றிரவு முயலுக்குத் தனது படுக்கையிலிருக்கப் பிடிக்கவில்லை. வேடிக்கையாக உலாத்தலுக்குப்போக விரும்பிற்று. உடனே முயல் அந்தக் காட்டுவழியாகச் சென்றுகொண்டிருந்தது. ஆமை தன்னை ஏமாற்றியதை நினைக்க நரிக்கு ஆத்திரம் பொங்கி வழிந்தது. இனி யாவது முயலைத் தனக்கு உணவாக்கவேண்டுமென்று நரி தன் மனதில் நினைத்துக்கொண்டது.

முயல் வந்த பாதையிலிருந்த ஓர் பொருள், முயலுக்கு ஆசையையும், அச்சத்தையும ஒருங்கே உண்டாக்கிற்று. அப்பொருள் பசும்புல்லால் நிரம்பப்பட்ட ஓர் கூடை. நரி தனக்குள் ஓர் வினைப்போட்டது. "எப்படி இப்புற் கூடை இக்காட்டில் தானாகவரும்?" "இதற்கு ஏதோ காரணம் (சூது) இருக்கவேண்டும்." என்று அந்தக் கேள்விக்கு முயலே விடையையும் இறுத்தது. ஆனால் முயல் அப்பசும்புல்லை உண்பான் வேண்டி அதனண்டை செல்லப் பார்த்தது. கால்கள் "மாட்டேன்" என்று பின் வாங்கின.

முயல் புற்கூடையினருகே சென்று நாலுபக்கமுந் திரும்பிப் பார்த்தது. உடனே புற்கூடையுட் குதித்தது. அப்பொழுது கூட அசம்பாவிதமான காரியம் ஒன்றும் நிகழவில்லை. முயல் அவசர, அவசரமாகப் புல்லை உண்ணத் தொடங்கியது. சிறிதளவு புல்லும் கூடையுட் குறைந்தது. கூடையினுள்ளிருந்த ஓர் பிராணி முயலின் காலை இறுகப்பிடித்துக்கொண்டது! முயலால் அப்பிடியினின்றும் நழுவி ஓட வியலாமற் போய்விட்டது. முயல் அளவிலா மன்றாட்டம் மன்றாடியும், நரி முயலின் காலை விட்டபாடில்லை.

நரி முயலை இழுத்துக்கொண்டு சென்றது. முயல் "நரியாரே என்னை இவ்விடத்திலேயே கொன்றுவிடும்" என்று கெஞ்சியது. நரி முயல் கூறிய வார்த்தைக்கு மாறாக, முயலை அதிகதூரமிழுத்துச் சென்றது. கடைசியில் நரி ஓர் மரமறைவில் வைத்து முயலைக்கொல்லப் பார்த்தது. அதே சமயம் முயல் பெருஞ் சப்தமாக வெருட்சியுடன் "ஐயா! நரியாரே ஓர் புலி உம் பின்புறத்தில் வருகிறது. உடனே என்னைக் கொல்லும்" என்றது. நரி திடுக்குற்று ('நரிக்குப் பாதியுயிர்போய் விட்டது') முயலைப் பிடித்திருந்த பிடியை நழுவவிட்டுப் பின்புறமாகத் திரும்பியது. முயலோ வாயுவேக மனோவேகமாகக் காட்டுக்குள் ஓடி மறைந்தது. புலி எங்கே? நரியின்வாய்க்கெட்டியது அதன் கைக்கெட்டவில்லை.

சி. அரசரத்தினம் (180)





# "இனத்தியல்பதாகு மறிவு"

அ. தில்லையம்மா (286)

ஓர் ஏழைக் குடியானவன். தரித்திரம் அவனிடத்தில் தரித்துவிட்டது. தன்னிடத்திலிருந்த கிளிப்பிள்ளைகள் இரண்டையும் விற்கவேண்டிவந்தது. ஒன்றை வாங்கினவன் வேடன். மற்றக்கிளியை வாங்கினவன் ஒரு உண்மைத் துறவி. கிளியை வாங்கியவர்கள் தத்தம் வீடுகளில் வளர்த்து வந்தனர்.

ஒருநாள், அந்தக் குடியானவன் காட்டுமார்க்கமாக வெகுதூரஞ் சென்றுகொண்டிருந்தான். அவனுக்கு அடங்காத தண்ணீர்விடாய். பசியோ அதிலும்பன்மடங்கு. எங்குந் தேடி அலைந்தான்!! அதிக தூரத்திலே ஒரு குடிசை தென்பட்டது. போனான். குடிசையின் கூரையில் ஒரு கிளி இருந்தது. அந்தக்கிளி குடியானவனைக் கண்டது; தன்னை வளர்க்கும் வேடனை "அண்ணா! ஓடிவா!! யாரோ வருகிறான். அம்பையும் வில்லையும் எடு! அவனைக்கொல்!!" என்றது. அதனைக்கேட்ட குடியானவன், "தன்னிடத்திற் சண்டைசெய்ய ஆயுதமும் இல்லை; தைரியமும் இல்லை;" என நினைத்தான். வந்தது பயம். உடனே எடுத்தான் ஓட்டம். களைப்பு மேலிட்டது. தள்ளாடித் தள்ளாடிச் சென்றான்.

தற்செயலாக வேறோர் குடிசை தோன்றிற்று. அங்கே போனான். அந்தக் கூரையிலும் ஒரு கிளிப்பிள்ளை இருந்தது. முன்போலவே இந்தக் கிளிப்பிள்ளையும் சொல்லுமா? என நினைத்தான். வந்தது பயம் அவனுக்கு. ஆயினும் களைப்பு மிகுதியினால் குடிசையின் கிட்டவே போனான். போனதும் அவன் முன்னையைப் போல் ஏமாறவில்லை. கிளிப்பிள்ளை அண்ணா! அண்ணா!! மிக்கக் களைப்புடன் ஒரு மனிதன் வருகிறான்; செம்பை எடுத்துத் தண்ணீர் வாருங்கள்! அவனுடைய களைப்பை ஆற்றுங்கள்!!" என்று இரக்கமுடன் கூறிற்று. அதுகேட்ட குடியானவன் பயந் தெளிந்து குடிசையின் சமீபம் போனான். துறவி அவனை அன்புடன் உபசரித்து அனுப்பிவைத்தார்.

குடியானவன் போகும்போது நினைந்து நினைந்து பார்த்தான். இங்கே கண்ட கிளிப்பிள்ளைகள் இரண்டும் தான் விற்றவைகளே என்பதை உணர்ந்தான். அவற்றின் தாரதம்மியங்களை நன்கு சிந்தித்தான்!

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு."

## விண்ணப்பப் பத்திரம்

திகதி.............................

அன்பார்ந்த தாத்தா!

தயவுசெய்து "ஈழகேசரி இளைஞர் சங்கத்"தில் என்னை ஒரு அங்கத்தவராகப் பதிவு செய்து கொள்ளுங்கள். இத்துடன் 12 சத முத்திரை ஆறுமாத சந்தாப்பணமாக அனுப்பியிருக்கிறேன். [ இந்தியா 2 அணா; மலாயா 16 காசு. ]

பெயர்.......................................................................................

பிறந்த திகதி.....................மாதம்.....................வருடம்.....................

விலாசம்.......................................................................................

.......................................................................................

பெற்றோர், அல்லது உபாத்தியாயர் கையொப்பம் .......................................................................................

இந்த விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 'தாத்தா' c/o 'ஈழகேசரி', சுன்னாகம், இலங்கை என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

[குறிப்பு : இளைஞர்சங்கத்தில் சேர விரும்புவோர் தமது விண்ணப்பப் பத்திரத்தை அச்சுக் கூபனிலேயே நிரப்பியனுப்பவேண்டும். வெறுங் காகிதத்தில் எழுதப்படுவன கவனிக்கப்படா. சந்தா புதுப்பிப்பவர்களுக்கு இந்த நிபந்தனை கிடையாது]

# பொய்யா மொழி

[ K. S. கிருஷ்ணன் B. A. ]

பழந்தமிழிலக்கியங்களுள் திருக்குறள் போன்ற மேன்மையுடைய நூல் வேறுயாதொன்றும் இல்லையென்றால் அது புனைந்துரையாகாது. அது மிகப் பழைய நூலாயினும் இன்னும் புதியதாகவே தமிழ் மக்களால் போற்றப்படுவது அதற்குச் சான்றாகும். அந்நூலே நந்தமிழ் மூதாதையரின் அறிவுக்களஞ்சியமாகும். அதிலுள்ள அறிவு எப்பொழுதும் புதியதாய், எத்திறத்தாருக்கும் பொருந்துவதாய், எக்காலத்திலும் பெரியோரால் போற்றக் கூடியதாய்த் திகழ்கின்றது.

அறமுதலாய நான்கு உறுதிப் பொருள்களையும் முப்பாலாக, ஈரடியால் வகுத்துரைக்கும் ஓர் ஒப்பற்ற நூல் திருக்குறள். அந்நூலில் உள்ள உயரிய நோக்கமும், தெள்ளிய மொழிகளும், உலகத்தவர் மனத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. இல்வாழ்வானுக்கும், துறவிகளுக்கும், அரசர்களுக்கும், உழவர்களுக்கும், அமைச்சருக்கும், வாணிபருக்கும், தூதுவருக்கும், காவலாளருக்கும், இன்னும் பல திறத்தாருக்கும் செவ்விய முறையில் அந்நூல் அறிவுறுத்துகின்றது. எவையெவை விலக்கல் வேண்டும், எவையெவை கைக் கொள்ளல்வேண்டும் என்று, யுத்தி புகட்டுவதில் இது போன்ற நூல் வேறிலில்லை.

ஒவ்வொரு திருக்குறட் பாவும் அருள் மொழிகளால் ஆக்கப்பட்டு, விழுமிய பொருள் பொதிந்து விளங்குகின்றது. பொருளின் செறிவும் சொல்லின் சீர்மையும், திருக்குறளுக்கேயுள்ள தனிச் சிறப்பு. சொல்லின் தெள்ளமுதத்தினைப் பருகும்பொழுது, இன்சுவைக் கட்டியான பொருள் அவ்வமுதத்தினின்றும் திளைத்து உள்ளத்தை மகிழ்விக்கின்றது.

அவ்வாறு ஒப்பற்றிருக்கும் நூலை உலகத்திற்கு அருளியவர் கருணை வள்ளலான திருவள்ளுவனார் என்பது யாவரும் அறிந்ததே. 'சொல்லினடை தெரிந்த நன்மையவர்' ஆதலால் அவர் எச்சொல் விழுமிய பொருளைப் பயக்குமோ அச்சொல்லையே ஆய்ந்தறிந்து அமைத்திருக்கின்றார். ஒரு சொல்லேனும் வீணாகவாவது, மிகையாகவாவது அவரியற்றிய குறட்பாக்களுள் காணக்கிடைத்திலது.

'நாமறிந்த புலவர்களுள் வள்ளுவர் போல்' மக்களின் அகம், புறமாகிய இவ்விரண்டின் தன்மைகளையும், கேழ்ச்சிகளையும் அறிந்து சொல்லுபவர் வேறொருவர் இல்லை. அவர் சிறந்த அகநூல் வல்லுநர். மிகச் சிறந்த துறவி. ஒப்பற்ற இராசதந்திரி. தலை சிறந்த வாணிபர். மகா தியாகி. இல்வாழ்வாருள் தலை சிறந்தவர். சிறந்த வைத்தியர். சிறந்த உழவர்.

சிறந்த நண்பர். சிறந்த காதலன்; இணையற்ற காதலி. உற்ற தோழி. வழுவிலா அமைச்சர். இவ்வாறாக எல்லாத் துறைகளிலும் தலை சிறந்த அறிவுள்ளவராக வாழ்ந்தவர் திருவள்ளுவர். அவர் மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கு எவை யெவை யின்றியமையாதவையோ, அவைகளைத் தொகுத்தும் விரித்தும் தந்துளார். ஆகவே, அவர் செய்தருளிய நூலுக்குப் 'பொய்யா மொழி' யென்ற சாலவும் பொருத்தமுடைய பெயரை அறிவுடையோர் சூட்டியுள்ளார்கள்.

# மீண்டும் நரியின் ஏமாற்றம்

அன்றுமாலை முயலுக்குத் தனது படுக்கையிலிருக்கப் பிடிக்கவில்லை. வேடிக்கையாக உலாத்துக்குப்போக விரும்பிற்று. உடனே முயல் அந்தக் காட்டுவழியாகச் சென்றுகொண்டிருந்தது. ஆமை தன்னை ஏமாற்றியதை நினைக்க நரிக்கு ஆத்திரம் பொங்கி வழிந்தது. இனியாவது முயலைத் தனக்கு உணவாக்கவேண்டுமென்று நரி தன் மனதில் நினைத்துக்கொண்டது.

முயல் வந்த பாதையிலிருந்த ஓர் பொருள் முயலுக்கு ஆசையையும், அச்சத்தையும ஒருங்கே உண்டாக்கிற்று. அப்பொருள் பசும்புல்லால் நிரம்பப்பட்ட ஓர் கூடை. நரி தனக்குள் ஒரு வினாப்போட்டது. "எப்படி இப்புற் கூடை இக்காட்டில் தானாகவரும்?" "இதற்கு ஏதோ காரணம் (சூது) இருக்கவேண்டும்." என்று அந்தக் கேள்விக்கு முயலே விடையையும் இறுத்தது. ஆனால் முயல் அப்பசும்புல்லை உண்பான் வேண்டி அதனண்டை செல்லப் பார்த்தது. கால்கள் "மாட்டேன்" என்று பின் வாங்கின.

முயல் புற்கூடையினருகே சென்று நாலுபக்கமுந் திரும்பிப் பார்த்தது. உடனே புற்கூடையுட் குதித்தது. அப்பொழுது கூட அசம்பாவிதமான காரியம் ஒன்றும் நிகழவில்லை. முயல் அவசர, அவசரமாகப் புல்லை உண்ணத் தொடங்கியது. சிறிதளவு புல்லும் கூடையுட் குறைந்தது. கூடையிலுள்ளிருந்த ஓர் பிராணி முயலின் காலை இறுகப்பிடித்துக்கொண்டது: முயலால் அப்பிடியினின்றும் நழுவி ஓட வியலாமற் போய்விட்டது. முயல் அளவிலா மன்றாட்டம் மன்றாடியும், நரி முயலின் காலை விட்டபாடில்லை.

நரி முயலை இழுத்துக்கொண்டு சென்றது. முயல் "நரியாரே என்னை இவ்விடத்திலேயே கொன்றுவிடும்" என்று கெஞ்சியது. நரி முயல் கூறிய வார்த்தைக்கு மாறாக, முயலை அதிகதூரமிழுத்துச் சென்றது. கடைசியில் நரி ஓர் மரமறைவில் வைத்து முயலைக்கொல்லப் பார்த்தது. அதே சமயம் முயல் பெருஞ் சப்தமாக வெருட்சியுடன் "ஐயா! நரியாரே ஓர் புலி உம் பின்புறத்தில் வருகிறது. உடனே என்னைக் கொல்லும்" என்றது. நரி திடுக்குற்று ('நரிக்குப் பாதியுயிர்போய் விட்டது') முயலைப் பிடித்திருந்த பிடியை நழுவவிட்டுப் பின்புறமாகத் திரும்பியது. முயலோ வாயுவேக மனோவேகமாகக் காட்டுக்குள் ஓடி மறைந்தது. புலி எங்கே? நரியின்வாய்க்கெட்டியது அதன் கைக்கெட்டவில்லை.

சி. அரசரத்தினம் (180)

அந்தரத்தே நின்றும் ஆனகத் கூத்தனுக்கென், சிந்தை இறைகொடுத்துச் சேவிப்ப தெந்நாளோ.



# "இனத்தியல்பதாகு மறிவு"

அ. தில்லையம்மா (286)

ஓர் ஏழைக் குடியானவன். தரித்திரம் அவனிடத்தில் தரித்துவிட்டது. தன்னிடத்திலிருந்த கிளிப்பிள்ளைகள் இரண்டையும் விற்கவேண்டிவந்தது. ஒன்றை வாங்கினவன் வேடன். மற்றக்கிளியை வாங்கினவன் ஒரு உண்மைத் துறவி. கிளியை வாங்கியவர்கள் தத்தம் வீடுகளில் வளர்த்து வந்தனர்.

ஒருநாள், அந்தக் குடியானவன் காட்டுமார்க்கமாக வெகுதூரஞ் சென்றுகொண்டிருந்தான். அவனுக்கு அடங்காத தண்ணீர்விடாய். பசியோ அதிலும்பன்மடங்கு. எங்குந் தேடி அலைந்தான்!! அதிக தூரத்திலே ஒரு குடிசை தென்பட்டது. போனான். குடிசையின் கூரையில் ஒரு கிளி இருந்தது. அந்தக்கிளி குடியானவனைக் கண்டது; தன்னை வளர்க்கும் வேடனை "அண்ணா! ஓடிவா!! யாரோ வருகிறான். அம்பையும் வில்லையும் எடு! அவனைக்கொல்!!" என்றது. அதனைக்கேட்ட குடியானவன், "தன்னிடத்திற் சண்டைசெய்ய ஆயுதமும் இல்லை; தைரியமும் இல்லை;" என நினைத்தான். வந்தது பயம். உடனே எடுத்தான் ஓட்டம். களைப்பு மேலிட்டது. தள்ளாடித் தள்ளாடிச் சென்றான்.

தற்செயலாக வேறோர் குடிசை தோன்றிற்று. அங்கே போனான். அந்தக் கூரையிலும் ஒரு கிளிப்பிள்ளை இருந்தது. முன்போலவே இந்தக் கிளிப்பிள்ளையும் சொல்லுமா? என நினைத்தான். வந்தது பயம் அவனுக்கு. ஆயினும் களைப்பு மிகுதியினால் குடிசையின் கிட்டவே போனான். போனதும் அவன் முன்னையைப் போல் ஏமாறவில்லை. கிளிப்பிள்ளை அண்ணா! அண்ணா!! மிக்கக் களைப்புடன் ஒரு மனிதன் வருகிறான்; செம்பை எடுத்துத் தண்ணீர் வாருங்கள்! அவனுடைய களைப்பை ஆற்றுங்கள்!!" என்று இரக்கமுடன் கூறிற்று. அதுகேட்ட குடியானவன் பயந் தெளிந்து குடிசையின் சமீபம் போனான். துறவி அவனை அன்புடன் உபசரித்து அனுப்பிவைத்தார்.

குடியானவன் போகும்போது நினைந்து நினைந்து பார்த்தான். இங்கே கண்ட கிளிப்பிள்ளைகள் இரண்டும் தான் விற்றவைகளே என்பதை உணர்ந்தான். அவற்றின் தாரதம்மியங்களை நன்கு சிந்தித்தான்!

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு."

## விண்ணப்பப் பத்திரம்

திகதி.........................

அன்பார்ந்த தாத்தா!

தயவுசெய்து "ஈழகேசரி இளைஞர் சங்கத்" தில் என்னை ஒரு அங்கத்தவராகப் பதிவு செய்து கொள்ளுங்கள். இத்துடன் 12 சத முத்திரை ஆறுமாத சந்தாப்பணமாக அனுப்பியிருக்கிறேன். [ இந்தியா 2 அணா; மலாயா 16 காசு. ]

பெயர்..............................................................

பிறந்த திகதி..................மாதம்..................வருடம்..................

விலாசம்..............................................................

..............................................................

பெற்றோர், அல்லது உபாத்தியாயர் கையொப்பம் ..............................

இந்த விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 'தாத்தா' c/o 'ஈழகேசரி', சுன்னாகம், இலங்கை என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

[குறிப்பு : இளைஞர்சங்கத்தில் சேர விரும்புவோர் தமது விண்ணப்பப் பத்திரத்தை அச்சுக் கூபனிலேயே நிரப்பியனுப்பவேண்டும். வெறுங் காகிதத்தில் எழுதப்படுவன கவனிக்கப்படா. சந்தா புதுப்பிப்பவர்களுக்கு இந்த நிபந்தனை கிடையாது]

போகமே தமான புழுகமெல்லாந் தீரஇன்பம், ஏகமேயாக வேயென் றிருக்குநா ளெந்நாளோ.

# பாஷை

[மந்திரிபகுதிப் பகுதிவித்தியாதரிசி பிரமஸ்ரீ தீ. சதாசிவ ஐயர் அவர்கள், கல்முனை ஆசிரியர் விடுமுறைக் கழகத்தில் செய்த உபந்நியாசக் குறிப்புக்கள்.]

I. தாய்ப் பாஷையாக அந்நிய பாஷையாக யாதாயினும் ஒரு பாஷையைக் கற்றலாவது பின்வருமாறு இரு வகைத்தாம்.

A. ஒன்று அப்பாஷையைக் கற்றல், அதாவது, அப்பாஷையை வழங்குதல்—வழங்கும் வழிகள் நாலு; (1) பிறர் பேசுவதைக் கேட்டு விளங்குதல், (2) தன் கருத்தை வெளிப்படுத்தித் தான் பேசுதல், (3) மற்றவர் எழுதியதை வாசித்துத் தான் விளங்குதல், (4) தன் கருத்தை எழுதி வெளிப்படுத்தல் என்பனவாம்.

B. மற்றவகை அப்பாஷையைப் பற்றிய செய்திகளை (அதன் இயலை)ப் படித்தல், அதாவது அப்பாஷையின் அமைப்புமுறை முதலிய செய்திகள் பலவற்றையும் படித்தல் என்பது—(1) இச் செய்திகளுட் சில அப்பாஷையை நன்கு படித்தற்கு — பேசிப் பயின்றுகொள்வதற்கு—துணையாயிருப்பன. (2) சில செய்திகள் உயர்தரப் படிப்புக்குரியனவாய்ச் சிலருக்கு மனங் களிகூரச் செய்வன. எனினும் பாஷையைப் பயின்று அறிதற்கு அவை மிக்க அவசியமானவையல்ல என்ப. பாஷையைப் பற்றிய செய்தியே இலக்கணம் என்பது. அதனைப் படித்தலும் முற்கூறியபடி—(1) உம் (2) உம்—இருவகைத்து.

பாஷையைப் பயின்று படிக்குங்கால் முதலாம் வகையாகிய இலக்கண விஷயங்களைப் பயிற்சியோடு ஒட்டிப் பாஷைப் படிப்புக்கு உதவியாக அவசியம் அறிதல் வேண்டும்: தனிப் பாடமாக வேண்டா. இது பாடசாலையில் மாணவரது முதல் 4, 5 வருடகாலத்துக்கு உரியது—அதன்பின் இலக்கணம் ஒரு தனிப் பாடமாக 2-ம் வகையிற் குறிப்பிட்டபடி கற்பிக்கற்பாலது.

II. பாஷை என்னும் பெரும் விஷயத்தில் அடங்கியுள்ள உபபிரிவுகள் வருமாறு:—

A. பேச்சு: (1) பேசுதல். (2) கேட்க வாசித்தல். (3) உச்சரிப்பு.

B. கண் வாசிப்பு (மௌன வாசிப்பு), — கண் பார்த்து உள்ளத்தமைத்தல்.

C. எழுத்து: (1) கையெழுத்து, (2) எழுத்துக் கூட்டல், ஒழுங்கு செய்தல், குறியீடு. (3) கட்டுரை வரைதல் — அநுபவ சித்தமான முறையாய் (Practical), தானே புதிதாய் உண்டாக்கி எழுதல்.

இத்துறைகளிலெல்லாம் பயின்று அவற்றைச் செய்யும் ஆற்றல் பெறுதலே பயனும்.

III. இலக்கணங் கற்றலின் பயன், வீட்டில் வழங்கும் பேச்சுத் திருத்தமுடையதாயின் இலக்கணங் கற்றல் அநாவசியகம்—வீட்டுப் பேச்சு—சொல்வளம் பண்ணல் உபாத்தியாயர் கடன்—வீட்டுப் பாஷையும் பள்ளிக்கூடப் பாஷையும்—மாணவரது பேச்சை முதலிலிருந்தே பயிற்ற வேண்டிய சந்தர்ப்பம்—பேசிப் பயிலச் செய்தலே முறை.

பேச்சு வழக்கிலுள்ள ஒரு பாஷையின் இரு அமிசங்கள் — கருத்தும், மொழியும் — கருத்து வாசிப்பினாலும் அநுபவத்தாலும் வரும்; கருத்தைத் வெளிப்படுத்தும் சொல் வல்லபம் காரியங்களை வெளிப்படையாகவும் தெளிவாகவும் சொல்லிப் பேசிப் பயிலுதலினால் வருவது.

“செந்தமிழும் நாப்பழக்கம் வைத்ததொருகல்வி மனப்பழக்கம்” என்பதும் நோக்குக.

இலக்கணத்தால் கருத்து வளமாவது சொல்வளமாவது வருவதின்று. பாஷை அல்லது பேச்சு முந்தியது; இலக்கணம் பிந்தியது. இலக்கணம் பேச்சைச் செப்பஞ் செய்வது. இலக்கண அறிவில்லாதவர் மொழிக்கணுள்ள தப்பு இன்னது என்று சொல்லவுமாட்டார். இருவகையான பேச்சில் எது கொள்ளத்தக்கது என்றும் நிச்சயித்துச் சொல்லவுமாட்டார். இலக்கணவரையறையில்லையாயின் ஒவ்வொருவரும் தத்தமக்கிசைந்தவாறு பேசி இடர்ப்படுவர்—வேறு அந்நிய மொழி கற்பார்க்கும் தம் மொழி இலக்கணம் பெரிதும் துணைசெய்வது. தாய் மொழியே யாயினும் அதனை வருந்திக் கற்றல் அவசியம். இன்றேல் நம் முன்னோரளித்த முதுசொம் நமக்கு இல்லையாகும்.

IV. இலக்கணக் கல்வி பாடசாலைகளில் ஏன் வெறுப்புக்குரிய பாடமாயிற்று—பாஷையைப் படித்து அறிந்து நிபுணராதற்கு இலக்கண அறிவு வேண்டியதின்று என்பர் ஒரு சாரார். கற்போரும் கற்பிப்போரும் இதனை ஏன் வெறுத்து ஒதுக்குவாராயினர்—காரணத்தை விசாரித்தால் குறையை நீக்கலாம் — இக்கால நிபுணரது கொள்கை—பிள்ளை ஒன்றைப் பற்றித் தொடர்புறச் சிந்திக்கவும், தன் சிந்தனைகளைத் தடையின்றித் தெளிவாய் எடுத்துச் சொல்லவும் வல்ல சக்தியைப் பெறுதற்கு முன் பாஷையின் இயல்பு, தன்மை, என்பவற்றை வேறாகப் பிரித்தெடுத்து ஆராய்வதாகிய இலக்கணக் கல்வியைப் படித்தற்கு ஒருவித தகுதியும் அல்லது ஆதாரமும் அப் பிள்ளைக்கு இல்லையாகும் என்பது. பாஷையைப் பயின்று அறியாதார்க்கு இலக்கணம் எதற்கு. சிரேஷ்ட பாடசாலை மாணவர்க்கே இலக்கணம் கற்பிக்கற்பாலது—இது பழைய தமிழ் ஆசிரியர்களது கொள்கை.

“இலக்கியங் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பல்” என்றார் நன்னூலார். “இலக்கியத்தினின்று எடுக்கப்படும் இலக்கணம்,” “எள் இன்றாயின் எண்ணெயுமின்று” என்பனவும் நோக்குக. இலக்கியப் பயிற்சி நிரம்பப்பெற்ற பின்னரே இலக்கணம் படித்தல் முந்தையோர் மரபு—அதனைக் கைவிட்டு முறைமாறாக—பத்துச் செய்யுள்தானும் படித்தறியாதார்க்கு இலக்கண விதிகளைப் படிப்பிக்கத் தொடங்கியதே இப் பாடம் மாணவர்க்குக் கசப்பாயினமைக்கு ஒரு காரணம். பேச்சோடும் இலக்கியத்தோடும் தொடர்பு படுத்தாது இலக்கணமென ஒன்று தனியாக வைத்துப் படிப்பித்த முன்றுகேடும் மற்றொரு காரணம். ஆரம்ப வகுப்புகளில் மொழியை நன்கு பயின்று சொல்வளம் நிரம்பிய பின்னர் மேல்வகுப்புகளில் இலக்கணம் படிப்பித்தல் முறையாகும்.

V. பாடசாலை மாணவர் கற்கவேண்டிய இலக்கணம் ஆனது அதனைப் படித்தலால் அவர் சொல் வகைகளையும், சொன்முடிபுகளையும் சொற்றொடர்களையும் அறிந்து வாக்கியப் பொருளை நன்கு விளங்கிக்கொள்ளுதற்கு அது ஏற்ற துணையாயிருத்தல் வேண்டும்.

தமிழில் சொற்களின் ரூபத்தைக்கொண்டு பொருள் சொல்லவாவது இன்னவகைச் சொல் என்றாவது சொல்லல் கூடாது—வாக்கியத்தில் வருந் தொடர்பு பற்றியும் நிலைபற்றியும் ஒரு சொல்லே வேறு வேறு வகைச் சொல்லாகும். ஒரு சொல்லுத் தானே தான் நின்ற நிலையில் இரண்டு வகைச் சொல்லாகத் தொழில் செய்யும். ஒரு சொல் வசனத்தில் நின்று செய்யுந் தொழிலைக்கொண்டே அது என்ன வகை என்று அறியலாம். அதன் உருவத்தை நோக்கியன்று—ஒரு சொல்லினது பொருளையும் தொழிலையும் நோக்கியே அதற்கு இலக்கண முடிபு கூறல் முடியும். ஆசிரியர் இப்பாடத் திட்டத்தை அமைக்கும்போது இதற்கு அத்திவாரமாய் விளங்கும் மூன்று அமிசங்களையும் தெரிந்துகொண்டு அமைக்க. அவை:— (1) சொல், சொற்பொருள், சொல்லாக்கம் (2) சொன் முடிபு. (3) சொற்றொடர் என்பன—அதனால் வாக்கியத்தின் அமைப்பு விளங்கும்—வெறும் இலக்கணப் பரிபாஷைச் சொற்களையும் விதிகளையும் படித்தல் வேண்டா.

VI. தாய்மொழிப் பயிற்சிக்குக் கருவியாகிய பேச்சு, வாசித்து விளங்குதல், எழுதுதல் என்பன, முதலில் நன்றாக அமையச் செய்தல் வேண்டும். முதல் 4, 5, வருடகாலமும் கேள்வியினாலும் வாசிப்பினாலும் பேச்சுத் திருந்துதல்—சொற்களையும் தொடர்களையும் வைத்து வாக்கியம் இயற்றுதல், கதை சொல்லல் முதலியனவாய் மொழி முறையாகச் செய்யப்படுதல் வேண்டும். கீழ்ப் பிரிவு முதல் சிரேஷ்ட வகுப்பு ஈறாகவுள்ள எல்லா வகுப்பிலும் இப் பயிற்சி நடைபெறுதல்—தொடர்ந்து அணிபெறப் பேசுதல்—இப்படிப் பேசினவற்றை எழுதுதல்—கட்டுரைகள் வாய்மொழி முறையாகச் சொல்லுதல். இதனால் நாவன்மை உண்டாகும்.

வாசிப்புப் புத்தகங்களைவிட வேறு பல புத்தகங்களை எடுத்து வாசித்துப் பயிலல்—பாஷை திருந்தும், சொல்வளம் பெருகும்—கீழ் வகுப்புமுதல் மூன்றாந்தரம் முடியவுள்ள வகுப்பு மாணவர் இவ்வாறு பிழையில்லாமல் சுத்தமான பாஷை பேசப் பயின்று கொள்வர். இவர்க்குத் தனியே இலக்கணமென்று ஒரு பாடமில்லை. நாலாந் தரத்திலும் ஐந்தாந்தரத்திலும் இவ்வாறே பேச்சும் வாசிப்பும் என்பவற்றோடு சாரவைத்துச் சில செய்திகள் விளங்கி அறிந்துகோள்ளச் செய்யலாம். செய்யுள்களது வகைகளையும் அறியலாம். செய்யுள் நடையை நோக்கவும் அதன் நுண்ணமைந்த தாளக் கட்டாகிய சீர்களையும் ஓசை வேறுபாடுகளையும் காதினால் உற்றுக்கேட்டு அறிந்து இன்புறச் செய்யலாம். செய்யுட்களில் வரும் மோனை எதுகைத் தொடை நயங்களை யறியலாம். (தொடரும்)





# ஆசிரியர்கள் எதிர்ப்பு

(337-ம் பக்கத் தொடர்ச்சி)

**திரு. ஏ. யோன்பிள்ளை**

“நாம் யாழ்ப்பாணத்தில் கூட்டங்கூடி மேடைகளில் நின்று பேசுவதுமாத்திரம் போதுமானதன்று. இலங்கையிலுள்ள சுவபாஷா ஆசிரியரெல்லோரும் ஒருங்குசேர்ந்து கொழும்பில் ஒரு மகாநாடு கூடிக் கல்விப்பிரமாணங்களைக் கண்டித்தாலன்றி நமது முயற்சிகள் கைகூடாதென்பது எனது எண்ணம்”.

**திரு. பொ. இரகுபதி**

“கல்விக்காகச் செலவு செய்யப்படும் பணம் எல்லாம் பள்ளிக்கூடங்களுக்குக் கொடுக்கப்படுகின்றதென்று எண்ணவேண்டாம். வித்தியா உத்தியோகஸ்தர்களுக்குப் பெருந்தொகையான பணம் செலவாகிறது. அநாவசியமான உத்தியோகஸ்தர்கள் வித்தியாபகுதியில் இருக்கின்றனர். அவ்வுத்தியோகஸ்தர்களை நீக்குவதால் பெருந்தொகைப் பணம் மிஞ்சும்”

# ஈழகேசரி இளைஞர்சங்கம்

(344-ம் பக்கத் தொடர்ச்சி)

த. இராசரத்தினம் (தென்மயிலை) ஆம், உமது பழைய முத்திரைகள் கொடுத்தால்தான் அவர்களும் தருவார்கள். ஆகையால் பல நண்பர்களை இதற்குச் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். இந்தியா முத்திரைகள் வேண்டுமானால் அனுப்புகிறேன்.

கீழ்க்கண்ட பேர்கள் பழைய முத்திரைகள் சேகரிப்பவர்கள். சி. அரசரத்தினம் (180) உடுவில் தெற்கு சைவவித்தியாசாலை, மானிப்பாய்; அ. ஜயேந்திரன், ‘இந்திரப் பிரஸ்தம்,’ பகத்தலேனுரோட், கொள்ளுப்பிட்டி, கொழும்பு. ஈா. சிவசுப்பிரமணியம் மகாதேவ வித்தியாசாலை, தென்மயிலை, தெல்லிப்பழை. R. Kailas Nath. Anandan Buildings, Kalpathi, Punjab. Masood Ahmad, Usta, Baluchistan. K. Thangappan Nair, Kottayam Travancore.

இவர்களுக்கு ஆங்கிலத்தில் தான் கடிதமெழுதவேண்டும். 6 சதம் தான் தபாற்செலவு. இன்னும் சில விலாசங்கள் பின்னர் தரப்படும்.

புதிய அங்கத்தவர் (முற்றொடர்)

286. அ. தில்லையம்மா. (இப்பெயர் 6-8-39-ல் தில்லையம்பலம் எனப் பிழையாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது)

288. K. S. Hilarean Peries

# பாஷை

[மத்தியபகுதிப் பகுதிவித்தியாதிசி பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்கள், கல்முனை ஆசிரியர் விடுமுறைக் கழகத்தில் செய்த உபந்நியாசக் குறிப்புக்கள்.]

I. தாய்ப் பாஷையாக அந்நிய பாஷையாக யாதானும் ஒரு பாஷையைக் கற்றலாவது பின்வருமாறு இருவகைத்தாம்.

A. ஒன்று அப்பாஷையைக் கற்றல், அதாவது, அப்பாஷையை வழங்குதல்—வழங்கும் வழிகள் நாலு; (1) பிறர் பேசுவதைக் கேட்டு விளங்குதல், (2) தன் கருத்தை வெளிப்படுத்தித் தான் பேசுதல், (3) மற்றவர் எழுதியதை வாசித்துத் தான் விளங்குதல், (4) தன் கருத்தை எழுதி வெளிப்படுத்தல் என்பன வாம்.

B. மற்றவகை அப்பாஷையைப் பற்றிய செய்திகளை (அதன் இயலை) ப் படித்தல், அதாவது அப்பாஷையின் அமைப்புமுறை முதலிய செய்திகள் பலவற்றையும் படித்தல் என்பது—(1) இச் செய்திகளுட் சில அப்பாஷையை நன்கு படித்தற்கு — பேசிப் பயின்றுகொள்வதற்கு—துணையாயிருப்பன. (2) சில செய்திகள் உயர்தரப் படிப்புக்குரியனவாய்ச் சிலருக்கு மனங் களிகூரச் செய்வன. எனினும் பாஷையைப் பயின்று அறிதற்கு அவை மிக்க அவசியமானவையல்ல என்ப. பாஷையைப் பற்றிய செய்தியே இலக்கணம் என்பது. அதனைப் படித்தலும் முற்கூறியபடி—(1) உம் (2) உம்—இருவகைத்து.

பாஷையைப் பயின்று படிக்குங்கால் முதலாம் வகையாகிய இலக்கண விஷயங்களைப் பயிற்சியோடு ஒட்டிப் பாஷைப் படிப்புக்கு உதவியாக அவசியம் அறிதல் வேண்டும்: தனிப் பாடமாக வேண்டா. இது பாடசாலையில் மாணவரது முதல் 4, 5 வருட காலத்துக்கு உரியது—அதன்பின் இலக்கணம் ஒரு தனிப் பாடமாக 2-ம் வகையிற் குறிப்பிட்டபடி கற்பிக்கற்பாலது.

II. பாஷை என்னும் பெரும் விஷயத்தில் அடங்கியுள்ள உபபிரிவுகள் வருமாறு:—

A. பேச்சு: (1) பேசுதல். (2) கேட்க வாசித்தல். (3) உச்சரிப்பு.

B. கண் வாசிப்பு (மௌன வாசிப்பு), — கண் பார்த்து உள்ளத்தமைத்தல்.

C. எழுத்து: (1) கையெழுத்து, (2) எழுத்துக் கூட்டல், ஒழுங்கு செய்தல், குறியீடு. (3) கட்டுரை வரைதல் — அநுபவ சித்தமான முறையாய் (Practical), தானே புதிதாய் உண்டாக்கி எழுதல்.

இத்துறைகளிலெல்லாம் பயின்று அவற்றைச் செய்யும் ஆற்றல் பெறுதலே பயனும்.

III. இலக்கணங் கற்றலின் பயன், வீட்டில் வழங்கும் பேச்சுத் திருத்தமுடையதாயின் இலக்கணங் கற்றல் அநாவசியகம்—வீட்டுப் பேச்சு—சொல்வளம் பண்ணல் உபாத்தியாயருடன்—வீட்டுப் பாஷையும் பள்ளிக்கூடப் பாஷையும்—மாணவரது பேச்சை முதலிலிருந்தே பயிற்ற வேண்டிய சந்தர்ப்பம்—பேசிப் பயிலச் செய்தலே முறை.

• பேச்சு வழக்கிலுள்ள ஒரு பாஷையின் இரு அமிசங்கள் — கருத்தும், மொழியும் — கருத்து வாசிப்பினாலும் அநுபவத்தாலும் வரும்; கருத்தைத் வெளிப்படுத்தும் சொல் வல்லபம் காரியங்களை வெளிப்படையாகவும் தெளிவாகவும் சொல்லிப் பேசிப் பயிலுதலினால் வருவது.

“செந்தமிழும் நாப்பழக்கம் வைத்ததொருகல்வி மனப்பழக்கம்” என்பதும் நோக்குக.

இலக்கணத்தால் கருத்து வளமாவது சொல்வளமாவது வருவதின்று. பாஷை அல்லது பேச்சு முந்தியது; இலக்கணம் பிந்தியது. இலக்கணம் பேச்சைச் செப்பஞ் செய்வது. இலக்கண அறிவில்லாதவர் மொழிக்கணுள்ள தப்பு இன்னது என்று சொல்லவுமாட்டார். இருவகையான பேச்சில் எது கொள்ளத்தக்கது என்றும் நிச்சயித்துச் சொல்லவுமாட்டார். இலக்கணவரையறையில்லையாயின் ஒவ்வொருவரும் தத்தமக்கிசைந்தவாறு பேசி இடர்ப்படுவர்—வேறு அந்நிய மொழி கற்பார்க்கும் தம் மொழி இலக்கணம் பெரிதும் துணைசெய்வது. தாய் மொழியே யாயினும் அதனை வருந்திக் கற்றல் அவசியம். இன்றேல் நம் முன்னோரளித்த முதுசொம் நமக்கு இல்லையாகும்.

IV. இலக்கணக் கல்வி பாடசாலைகளில் ஏன் வெறுப்புக்குரிய பாடமாயிற்று—பாஷையைப் படித்து அறிந்து நிபுணராதற்கு இலக்கண அறிவு வேண்டியதின்று என்பர் ஒரு சாரார். கற்போரும் கற்பிப்போரும் இதனை ஏன் வெறுத்து ஒதுக்குவாராயினர்—காரணத்தை விசாரித்தால் குறையை நீக்கலாம் — இக்கால நிபுணரது கொள்கை—பிள்ளை ஒன்றைப் பற்றித் தொடர்புறச் சிந்திக்கவும், தன் சிந்தனைகளைத் தடையின்றித் தெளிவாய் எடுத்துச் சொல்லவும் வல்ல சக்தியைப் பெறுதற்கு முன் பாஷையின் இயல்பு, தன்மை, என்பவற்றை வேறாகப் பிரித்தெடுத்து ஆராய்வதாகிய இலக்கணக் கல்வியைப் படித்தற்கு ஒருவித தகுதியும் அல்லது ஆதாரமும் அப் பிள்ளைக்கு இல்லையாகும் என்பது. பாஷையைப் பயின்று அறியாதார்க்கு இலக்கணம் எதற்கு. சிரேஷ்ட பாடசாலை மாணவர்க்கே இலக்கணம் கற்பிக்கற்பாலது—இது பழைய தமிழ் ஆசிரியர்களது கொள்கை.

“இலக்கியங் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பல்” என்றார் நன்னூலார். “இலக்கியத்தினின்று எடுக்கப்படும் இலக்கணம்,” “எள் இன்றாயின் எண்ணெயுமின்று” என்பனவும் நோக்குக. இலக்கியப் பயிற்சி நிரம்பப்பெற்ற பின்னரே இலக்கணம் படித்தல் முந்தையோர் மரபு—அதனைக் கைவிட்டு முறைமாறாக—பத்துச் செய்யுள்தானும் படித்தறியாதார்க்கு இலக்கண விதிகளைப் படிப்பிக்கத் தொடங்கியதே இப் பாடம் மாணவர்க்குக் கசப்பாயினமைக்கு ஒரு காரணம். பேச்சோடும் இலக்கியத்தோடும் தொடர்பு படுத்தாது இலக்கணமென ஒன்று தனியாக வைத்துப் படிப்பித்த முன்றுகேடும் மற்றொரு காரணம். ஆரம்ப வகுப்புகளில் மொழியை நன்கு பயின்று சொல்வளம் நிரம்பிய பின்னர் மேல்வகுப்புகளில் இலக்கணம் படிப்பித்தல் முறையாகும்.





V. பாடசாலை மாணவர் கற்கவேண்டிய இலக்கணம் ஆனது அதனைப் படித்தலால் அவர் சொல் வகைகளையும், சொன்முடிபுகளையும் சொற்றொடர்களையும் அறிந்து வாக்கியப் பொருளை நன்கு விளங்கிக்கொள்ளுதற்கு அது ஏற்ற துணையாயிருத்தல் வேண்டும்.

தமிழில் சொற்களின் ரூபத்தைக்கொண்டு பொருள் சொல்லவாவது இன்னவகைச் சொல் என்றாவது சொல்லல் கூடாது—வாக்கியத்தில் வருந் தொடர்பு பற்றியும் நிலைபற்றியும் ஒரு சொல்லே வேறு வேறு வகைச் சொல்லாகும். ஒரு சொல்லுத் தானே தான் நின்ற நிலையில் இரண்டு வகைச் சொல்லாகத் தொழில் செய்யும். ஒரு சொல் வசனத்தில் நின்று செய்யுந் தொழிலைக்கொண்டே அது என்ன வகை என்று அறியலாம். அதன் உருவத்தை நோக்கியன்று—ஒரு சொல்லினது பொருளையும் தொழிலையும் நோக்கியே அதற்கு இலக்கண முடிபு கூறல் முடியும். ஆசிரியர் இப்பாடத் திட்டத்தை அமைக்கும்போது இதற்கு அத்திவாரமாய் விளங்கும் மூன்று அமிசங்களையும் தொகுத்துகொண்டு அமைக்க. அவை:— (1) சொல், சொற்பொருள், சொல்லாக்கம் (2) சொன் முடிபு. (3) சொற்றொடர் என்பன—அதனால் வாக்கியத்தின் அமைப்பு விளங்கும்—வெறும் இலக்கணப் பரிபாஷைச் சொற்களையும் விதிகளையும் படித்தல் வேண்டா.

VI. தாய்மொழிப் பயிற்சிக்குக் கருவியாகிய பேச்சு, வாசித்து விளங்குதல், எழுதுதல் என்பன, முதலில் நன்றாக அமையச் செய்தல் வேண்டும். முதல் 4, 5, வருடகாலமும் கேள்வியினாலும் வாசிப்பினாலும் பேச்சுத் திருந்துதல்—சொற்களையும் தொடர்களையும் வைத்து வாக்கியம் இயற்றுதல், கதை சொல்லல் முதலியனவாய் மொழி முறையாகச் செய்யப்படுதல் வேண்டும். கீழ்ப் பிரிவு முதல் சிரேஷ்ட வகுப்பு ஈறாகவுள்ள எல்லா வகுப்பிலும் இப் பயிற்சி நடைபெறுதல்—தொடர்ந்து அணி பெறப் பேசுதல்—இப்படிப் பேசினவற்றை எழுதுதல்—கட்டுரைகள் வாய்மொழி முறையாகச் சொல்லுதல். இதனால் நாவன்மை உண்டாகும்.

வாசிப்புப் புத்தகங்களைவிட வேறு பல புத்தகங்களை எடுத்து வாசித்துப் பயிலல்—பாஷை திருந்தும், சொல் வளம் பெருகும்—கீழ் வகுப்புமுதல் மூன்றாந்தரம் முடியவுள்ள வகுப்பு மாணவர் இவ்வாறு பிழையில்லாமல் சுத்தமான பாஷை பேசப் பயின்று கொள்வர். இவர்க்குத் தனியே இலக்கணமென்று ஒரு பாடமில்லை. நாலாந் தரத்திலும் ஐந்தாந்தரத்திலும் இவ்வாறே பேச்சும் வாசிப்பும் என்பவற்றோடு சாரவைத்துச் சில செய்திகள் விளங்கி அறிந்துகொள்ளச் செய்யலாம். செய்யுள்களது வகைகளையும் அறியலாம். செய்யுள் நடையை நோக்கவும் அதன் நுண்ணமைந்த தாளக் கட்டாகிய சீர்களையும் ஓசை வேறுபாடுகளையும் காதினால் உற்றுக்கேட்டு அறிந்து இன்புறச் செய்யலாம். செய்யுட்களில் வரும் மோனை எதுகைத் தொடை நயங்களை யறியலாம். (தொடரும்)

## ஆசிரியர்கள் எதிர்ப்பு

(337-ம் பக்கத் தொடர்ச்சி)

**திரு. ஏ. யோன்பிள்ளை**

“நாம் யாழ்ப்பாணத்தில் கூட்டங்கூடி மேடைகளில் நின்று பேசுவதுமாத்திரம் போதுமானதன்று. இலங்கையிலுள்ள சுவபாஷா ஆசிரியரெல்லோரும் ஒருங்கு சேர்ந்து கொழும்பில் ஒரு மகாநாடு கூடிக் கல்விப்பிரமாணங்களைக் கண்டித்தாலன்றி நமது முயற்சிகள் கைகூடாதென்பது எனது எண்ணம்”.

**திரு. பொ. இரகுபதி**

“கல்விக்காகச் செலவு செய்யப்படும் பணம் எல்லாம் பள்ளிக்கூடங்களுக்குக் கொடுக்கப்படுகின்றதென்று எண்ணவேண்டாம். வித்தியா உத்தியோகஸ்தர்களுக்குப் பெருந்தொகையான பணம் செலவாகிறது. அநாவசியமான உத்தியோகஸ்தர்கள் வித்தியாபகுதியில் இருக்கின்றனர். அவ்வுத்தியோகஸ்தர்களை நீக்குவதால் பெருந்தொகைப் பணம் மிஞ்சும்”

## ஈழகேசரி இளைஞர்சங்கம்

(344-ம் பக்கத் தொடர்ச்சி)

க. இராசரத்தினம் (தென்மயிலை) ஆம், உமது பழைய முத்திரைகள் கொடுத்தால்தான் அவர்களும் தருவார்கள். ஆகையால் பல நண்பர்களை இதற்குச் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். இந்தியா முத்திரைகள் வேண்டுமானால் அனுப்புகிறேன்.

கீழ்க்கண்ட பேர்கள் பழைய முத்திரைகள் சேகரிப்பவர்கள். சி. அரசரத்தினம் (180) உடுவில் தெற்கு சைவவித்தியாசாலை, மானிப்பாய்; அ. ஜயேந்திரன், 'இந்திரப் பிரஸ்தம்,' பகத்தலேரோட், கொள்ளுப்பிட்டி, கொழும்பு. கா. சிவசுப்பிரமணியம் மகாதேவ வித்தியாசாலை, தென்மயிலை, தெல்லிப்பழை. R. Kailas Nath. Anandan Buildings, Kalpathi, Punjab. Masood Ahmad, Usta, Baluchistan. K. Thangappan Nair, Kottayam Travancore.

இவர்களுக்கு ஆங்கிலத்தில் தான் கடிதமெழுதவேண்டும். 6 சதம் தான் தபாற்செலவு. இன்னும் சில விலாசங்கள் பின்னர் தரப்படும்.

புதிய அங்கத்தவர் (முற்றொடர்)

286. அ. தில்லையம்மா. (இப்பெயர் 6-8-39-ல் தில்லையம்பலம் எனப் பிழையாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.)
288. K. S. Hilarean Peries

# நல்லொழுக்கம்

கடவுள் ஒருவர் உளர் என்றும், அவர் புண்ணியஞ் செய்கிற ஆத்மாக்களுக்கு மோக்ஷமும் பாவஞ்செய்யும் ஆத்மாக்களுக்கு நரகமும் கொடுக்கிறார் என்றும் நாம் நம்பவேண்டும். அருணோதயத்துக்கு முன்னெழுந்து கடவுளைத் துதிக்கவேண்டும். பின் அன்றைக்குத் தான் செய்யுங் காரியங்களை ஆலோசித்துத் தொடங்கவேண்டும். இரவிற் சயனிக்கும் போதும் தெய்வ வழிபாடு செய்தல் வேண்டும். அதிகாலையில் எழுந்திருப்பதால் பல நன்மைகளைப் பெறலாம். அவற்றை,

புத்தி யதற்குப் பொருந்து தெளிவளிக்கும்
உற்ற சரம்பென்றும் உறுதியுறும் — பித்தொழியும்
நாவழி வாதபித்தம் தத்தநிலை மன்னும்அதி
காலைவிழிப் பின்குணத்தைக் காண்.

என்ற பெரியோர் வாக்கால் அறியலாம்.

பொய்பேசுதல் குற்றங்களிற் பெரிதாதலின், எக்காரணத்தாலும் பொய்பேசலாகாது. உடலின் வெளிப்புறத்தைச் சுத்தஞ் செய்வது நீரேயாம். அதுபோல மனத்தைச் சுத்தப்படுத்துவது வாய்மையேயாம். இதை,

புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

என்ற வள்ளுவர் வாக்காலும் அறியலாம்.

பொய்பேசாமை தருமங்களிற் சிறந்ததாதலின்,

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

என்று தெய்வப்புலவர் கூறினர்.

பிறரது பொருளைக் கசப்பு என்று கருதி அதை இச்சிக்கவும் கவரவும் நினைக்கக் கூடாது. பிறர் பொருளைக் கண்டு அழுக்காறு கொள்ளவுங் கூடாது. பிறர் நம்மை இகழ்ந்தாலும் பொறுத்திருத்தல் அன்றி, அவரைத் திரும்பவுந் திட்டக் கூடாது. நாய் கடித்தால் அதனைத் திரும்பிக் கடிப்பவர் இல்லையே? நாம் நம்மைப்போலவே அயலாரையும் நேசித்தல் வேண்டும். பிறருக்குத் தீங்கு செய்தலும் செய்ய நினைத்தலுங் கூடாது. பிறர்க்கு வரும் இடுக்கண் களைய, நம்மாலான உதவி செய்தல் வேண்டும். மற்றவர்களைத் தூஷிப்பதும் இகழ்தலுங் கூடாது. பகைவரிடத்தும் இன்சொற் பேச வேண்டும். பிறரிடங் குற்றங் கண்டால் அவைகளை நேரிற் கூறித் திருத்தல் வேண்டும். கெட்ட சகவாசத்தால் நல்லோர் ஒழுக்கமுங் குன்றி விடுமாதலால், துஷ்டருடன் சகவாசஞ் செய்தல் கூடாது. தாய் தந்தை குரு இவர்களை வழிபட வேண்டும். பெரியோரைக் கண்டால் இருக்கை விட்டெழுந்து உபசரித்து அவர்கள் வீற்றிருந்த பின், நாமும் வீற்றிருத்தல் வேண்டும்.

தொற்று நோய்களுள்ள இடங்கட்குச் செல்லக் கூடாது. செல்ல நேரிடின் தகுந்த பாதுகாப்போடு செல்ல வேண்டும். கை, கால், முகங்களைச் சுத்திகரிக்காமற் சாப்பிடக் கூடாது. வயிற்றில் அரைவாசியை உணவாலும் காற்பங்கை நீராலும் நிரப்பவேண்டும். மிகுதிகாற்பங்கை வாயு உலாவ விடவேண்டும். அகால போசனஞ் செய்யக் கூடாது. தூங்காது விழித்திருக்கக் கூடாது. ஆகாரம் உட்கொண்டதும் குளிக்கக் கூடாது. ஆடையிலுள்ள தூசி பிறர்மேற் படாதவாறு நாம் துணியை உதற வேண்டும். தூங்குபவர்களை ஆபத்துக்காலத்திலன்றி எழுப்பக் கூடாது.

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணில் தெரியாத தூரத்தே
நீங்குவதே நல்ல நெறி.

என்று பெரியோர் கூறியிருப்பதை நாம் மறக்கக்கூடாது. பிறர் இரகசியம் பேசும்போது மறைந்திருந்து கேட்கலாகாது. அன்றியும் இருவர் பேசும்போது அவர் அனுமதியின்றி அச்சம்பாஷணைகளுக்குச் செவிகொடுத்தல் தவறும். வழியிற் போகும்போது நமக்கு முன்செல்பவர்களைக் கைதட்டிக் கூப்பிடலாகாது. ஏனெனில், நாம் எதிர்பாராத வேறுபலர் திரும்பிப் பார்ப்பார்கள். அதனால் நாம் பலரது போக்கைத் தடுக்கிறவர்களாகிறோம்.

பிள்ளைகளே! இப்படிப்பட்ட நல்லொழுக்கங்களைக் கைக்கொண்டு ஒழுகுவீராயின் இம்மையிற் கீர்த்தியும் மறுமையில் நற்கதியும் அடைவீர்கள் என்பது திண்ணம்.

"வஞ்சகமில்லா மனநிலை பழகு: சினந்தவிர்ந்துலகிற் சீரியனுயிரு"

V. S. சர்மா. (261)
J. S. C. வகுப்பு மாணவன்,
உடுவில் தெற்குச் சைவவித்தியாசாலை.

# "தனக்கடாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம்"

ஓர் ஊரிலே ஓர் வீடு இருந்தது. அவ்வீட்டில் ஒழுக்குவிழுந்த மூலையில் ஓர் பலகை இருந்தது. அப் பலகையின்கீழ் ஓர் தாய்த்தவளையும் பல் குஞ்சுத்தவளைகளும் வாழ்ந்து வந்தன. ஒருநாள் அவ்வீட்டு முற்றத்தில் சிலர் ஓர் நாடகம் பழகினார்கள். அவர்கள் பழகும்போது தவளைகளெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தன.

அவர்கள் சென்றதும் அதைப் பார்த்துக்கொண்டிருந்த குஞ்சுத் தவளைகள், தாயைப்பார்த்து "அம்மா இராத்திரி நாடகத்தைப்போல நாங்களும் ஆடுவோமோ" என்று கேட்டன. அதற்குத் தாய்த்தவளை "கிணற்றுத்தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன்" என்று சொன்னது. அதற்குக் குஞ்சுகள் "அம்மாவுக்கு நாகரீகம் தெரியாது" என்றன. அப்பொழுதும் தாய்த்தவளை மறுத்தது. அதற்குக் குஞ்சுகள் "முட்டைக்குள் குஞ்சு நெடுங்காலமிருக்குமோ" என்று கேட்டன. பின்பும் தாய் மறுத்தது. மறுக்க எல்லாக்குஞ்சுகளும் வெளியே வந்தன. பின்பு ஒரு குஞ்சு தாளம்போட, மற்றக்குஞ்சு கூத்தாட, மிகுதியாயுள்ள குஞ்சுகளெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தன.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த தாய்த்தவளை, தானும் கூத்தாட வேணுமென்று நினைத்து, வெளியே வந்தது. ஓர் தடியை எடுத்துக் கிழக்கூத்தாடிற்று. இது எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த காகமொன்று குஞ்சுத் தவளையொன்றைத் தூக்கிக் கொண்டுபோனது. தப்பிய தவளைகளெல்லாம் ஓடியொழித்தன. 'தனக்கறியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம்.

(206) ஐ - இராசரத்தினம்
சுன்னாகம்





# முருகர் அம்மான்

எங்கள் முருகரம்மமானைத் தெரியுமா? அவர் ஒரு நூதனமான மனுஷன். ஒருநாள் ஒரு படமொன்றை அவருடைய தம்பியார் அவருக்கு அனுப்பியிருந்தார். அதை என்ன செய்வது என்று முருகரம்மானின் மனைவியான எங்கள் மாமி கேட்டா. அதற்கு அவர் "அதை என்னிடங்கொடு. நான் தூக்கவேண்டிய இடத்தைக் கண்டுபிடித்துத் தூக்கிவிடுவேன். அதுஎன்ன ஒரு பிரமாதமான வேலையா? நீ, போ" என்றுவிட்டுப் படம் தூக்கும் வேலையை ஆரம்பித்தார். முதலாவதாய் சால்வையைக் களற்றி வைத்துவிட்டு வேலனைக் கூப்பிட்டு "5 சதத்துக்கு ஆணி வேண்டிக்கொண்டுவாடா" என்று அனுப்பினார். அவன் போனவுடனே வேலைக்காரியைக் கூப்பிட்டு அவனிடம் "இரண்டிஞ்சி நீளமுள்ள ஆணியென்று சொல்லு" என்று அவளையும் அவனுக்குப்பின்னால் அனுப்பினார். பின்பு தன்மகன் நாதனைக் கூப்பிட்டு "றூல்தடியைக் கொண்டுவா" என்றார். பின்பு மற்ற மகனைக் கூப்பிட்டு "அடுத்த வீட்டிற்போய் மிஸ்டர் ராமுவின் கால் மாறிவிட்டதா என்று கேட்டுவிட்டு, அவருடைய சுத்தியலைக் கொஞ்ச நேரத்திற்கு இரவலாய் வேண்டிக்கொண்டுவா" என்றார். சமயற்காரனைக் கூப்பிட்டு "ஏணியைக் கொண்டுவா அதோடு ஒரு கதிரையும் வேணும்" என்றுவிட்டு, வேலன் வந்தவுடன் படம் தூக்குகிற நாடாக் கயிறு வேண்டவேண்டும்" என்றார். "நாதன்! இந்தப் படத்தை இப்படிக்கொடு பார்ப்போம்" என்று படத்தை வேண்டினார். கை தவறிவிட்டது. பிறேம் வேறு கண்ணாடிவேறாகக் களன்று கீழே விழவும், கண்ணாடியையாவது காப்பாற்றலாமே என்றுநினைத்து கண்ணாடியைப்பிடித்தார். கையில் வெட்டிவிட்டது. இரத்தம் வடிவதைக்கண்ட அம்மான் சால்வையைத் தேடினார். நாங்களும் அவர் உத்தரவிட்ட வேலைகளையெல்லாம் விட்டுச் சால்வையைத் தேடினோம். "என்ன? நான் சால்வையைத் தோழாற் களற்றிவைத்து ஐந்து நிமிஷமாகவில்லை! அது எங்கே தொலைத்து விட்டீர்கள்?" என்று சீறி விழுந்தார். பின்பு அவர் உட்கார்ந்திருந்த கதிரையினின்று எழுந்தவுடன் தான் அதற்குமேல் உட்கார்ந்திருந்ததை அறிந்தார். சால்வையைத் 'தேடினது போதும்.ஆறு மடையர்கள்! நான் ஐந்து நிமிஷங்களுக்கு முன் வைத்த சால்வையைத்தேட முடியவில்லை. உங்களைத் தேடக் கேட்டதிலும்பார்க்கத் தெருவிற் போகிற ஒருவனைத் தேடச் சொல்லலாம்" என்றார். பிறகு கையில் ஒரு ஈரத்துணியைச் சுற்றிக்கொண்டு வேறு கண்ணாடியொன்று பார்த்துப்போட்டபிறகு வேலை ஆரம்பிக்க ஒரு மணித்தியாலஞ்சென்றது. கதிரையை இரண்டுபேர் பிடிக்க மற்றவர்கள் சுற்றிவரநிற்க என தோழைப்பிடித்துக்கொண்டு அம்மான் ஏறினார். ஏறி றூல்தடியை எடுத்து அளந்து ஒரு அடையாளம்போட்டார்; ஆணியை அடையாளம்போட்டஇடத்தில் வைத்து "அடேய்! சுத்தியலை இப்படிக்கொடு" என்றார். சுத்தியலைப் பார்த்தோம் காணவில்லை. அம்மானுக்கு வந்தகோபத்திற்குக் கணக்குவழக்கில்லை. "மந்திகள்மாதிரி வாயைப்பிளந்துகொண்டிருக்கிறீர்களே! இந்தச் சுத்தியலைப் பார்த்தெடுக்க முடியவில்லையா" என்றார். சுத்தியலைப் பார்த்தெடுத்துக் கொடுத்தவுடன் ஆணியைத்தவறவிட்டு விட்டார். அதையெடுக்க நாங்கள் எல்லாருமாய் நாலுகால் குழந்தைகள்போல் தவழவேண்டியதாயிற்று. ஆணியை எடுத்தவுடனே அடையாளம் வைத்தவிடம் எங்கேயென்று அவருக்கே தெரியவில்லை. நாங்கள் எல்லாரும் ஒவ்வொருவராய் ஏறி அவருக்குப் பக்கத்தில் நின்றுபார்த்து ஒவ்வொருவரும் வெவ்வேறிடங்களில் அடையாளங்கள் இருப்பதாய்க்கண்டு பிடித்தோம். "எல்லாரும் மடையன்கள் இறங்குங்கள் கீழே!" என்று அதட்டினார். பழையபடியும் அம்மான் றூல்தடியை எடுத்துக்கொண்டு $33\frac{3}{8}$ அங்குல உயரத்தில் படம் தூக்கவேண்டுமென்று ஞாபகமாய் வைத்துக்கொண்டு றூல்தடியால எத்தனை றூல் அளந்தால் அந்தத்தூரம் வருமென்று அவரும் நாங்களும் கணக்குப்போட்டதில் மண்டைவலி வந்துவிட்டது. கடைசியாக ஒரு தாக்கயிறால் அளந்து ஆணியை அடித்தார். அடிக்கும்பொழுது அம்மானின் விரலும் சுத்தியலுக்கிடையில் அகப்பட்டு நசுங்குண்டவுடன் சுத்தியலைக் கைவிட்டுவிட்டார். தூர் அதிர்ஷ்டவசமாய் அதுஎன் காலில் விழுந்து நான் ஐயோவென்று கதறினேன். சுவரிலும் சுண்ணாம்புப் பூச்சில் ஒரு பாகம் உடைந்து கீழே விழுந்தது. மறுபடி மேவறோரிடத்தில் ஆணியைஅடித்து ஒருபக்கஞ் சரிந்தபடி சுவரில் ஒரு ஓட்டையுடனும் பல அடையாளங்களுடனும் ஒருவாறு படத்தைத் தூக்கிவிட்டுக் கீழேஇறங்கும் போது சுத்தியல்விழுந்த அதேவிரலை மிதித்துக்கொண்டிறங்கினார். இறங்கி நின்று அளவற்ற பெருமையுடன் படத்தைப் பார்த்துவிட்டு "இன்னுமொருவனென்றால் ஒருகூலியாள் பிடித்தல்லவோ இந்தவேலையைச் செய்வித்திருப்பார்கள்" என்றார்.

மாமி : "இனிமேல் நீங்கள் ஏதாவது வேலைசெய்தால் நேரத்திற்குச் சொல்லிப்போட வேணும் ஒருகிழமைக்கு நான் பிள்ளைகளுடன் பிறந்தகம் போய்விட்டு பின்பு வாறேன்" என்று

அம்மான் : "இந்தப்பெண்களே இப்படித்தான் ஒரு சின்னக் காரியத்தைக்கூட பெரிய பிரமாதப் படுத்திவிடுவார்கள்" என்றார்.

அ. ஜயேந்திரன் ச. எண் 132

# நல்லொழுக்கம்

கடவுள் ஒருவர் உளர் என்றும், அவர் புண்ணியஞ் செய்கிற ஆத்மாக்களுக்கு மோக்ஷமும் பாவஞ்செய்யும் ஆத்மாக்களுக்கு நரகமும் கொடுக்கிறார் என்றும் நாம் நம்பவேண்டும். அருணோதயத்துக்கு முன்னெழுந்து கடவுளைத் துதிக்கவேண்டும். பின் அன்றைக்குத் தான் செய்யுங் காரியங்களை ஆலோசித்துத் தொடங்கவேண்டும். இரவிற் சயனிக்கும் போதும் தெய்வ வழிபாடு செய்தல் வேண்டும். அதிகாலையில் எழுந்திருப்பதால் பல நன்மைகளைப் பெறலாம். அவற்றை,

புத்தி யதற்குப் பொருந்து தெளிவளிக்கும்
உற்ற நரம்பென்றும் உறுதியுறும் — பித்தொழியும்
தாலவழி வாதபித்தம் சத்தநிலை மன்னும்அதி
காலைவிழிப் பின்குணத்தைக் காண்.

என்ற பெரியோர் வாக்கால் அறியலாம்.

பொய்பேசுதல் குற்றங்களிற் பெரிதாதலின், எக்காரணத்தாலும் பொய்பேசலாகாது. உடலின் வெளிப்புறத்தைச் சுத்தஞ் செய்வது நீரேயாம். அதுபோல மனத்தைச் சுத்தப்படுத்துவது வாய்மையேயாம். இதை,

புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

என்ற வள்ளுவர் வாக்காலும் அறியலாம்.

பொய்பேசாமை தருமங்களிற் சிறந்ததாதலின்,
பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

என்று தெய்வப்புலவர் கூறினர்.

பிறரது பொருளைக் கசப்பு என்று கருதி அதை இச்சிக்கவும் கவரவும் நினைக்கக் கூடாது. பிறர் பொருளைக் கண்டு அழுக்காறு கொள்ளவுங் கூடாது. பிறர் நம்மை இகழ்ந்தாலும் பொறுத்திருத்தல் அன்றி, அவரைத் திரும்பவுந் திட்டக்கூடாது. நாய் கடித்தால் அதனைத் திரும்பிக் கடிப்பவர் இல்லையே? நாம் நம்மைப்போலவே அயலாரையும் நேசித்தல் வேண்டும். பிறருக்குத் தீங்கு செய்தலும் செய்ய நினைத்தலுங் கூடாது. பிறர்க்கு வரும் இடுக்கண் களைய, நம்மாலான உதவி செய்தல் வேண்டும். மற்றவர்களைத் தூஷிப்பதும் இகழ்தலுங் கூடாது. பகைவரிடத்தும் இன்சொற் பேச வேண்டும். பிறரிடங் குற்றங் கண்டால் அவைகளை நேரிற் கூறித் திருத்தல் வேண்டும். கெட்ட சகவாசத்தால் நல்லோர் ஒழுக்கமுங் குன்றி விடுமாதலால், துஷ்டருடன் சகவாசஞ் செய்தல் கூடாது. தாய் தந்தை குரு இவர்களை வழிபட வேண்டும். பெரியோரைக் கண்டால் இருக்கை விட்டெழுந்து உபசரித்து அவர்கள் வீற்றிருந்த பின், நாமும் வீற்றிருத்தல் வேண்டும்.

தொற்று நோய்களுள்ள இடங்கட்குச் செல்லக் கூடாது. செல்ல நேரிடின் தகுந்த பாதுகாப்போடு செல்ல வேண்டும். கை, கால், முகங்களைச் சுத்திகரிக்காமற் சாப்பிடக் கூடாது. வயிற்றில் அரைவாசியை உணவாலும் காற்பங்கை நீராலும் நிரப்பவேண்டும். மிகுதிகாற்பங்கை வாயு உலாவ விடவேண்டும். அகால போசனஞ் செய்யக் கூடாது. தூங்காது விழித்திருக்கக் கூடாது. ஆகாரம் உட்கொண்டதும் குளிக்கக் கூடாது. ஆடையிலுள்ள தூசி பிறர்மேற் படாதவாறு நாம் துணியை உதற வேண்டும். தூங்குபவர்களை ஆபத்துக்காலத்திலன்றி எழுப்பக் கூடாது.

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணில் தெரியாத தூரத்தே
நீங்குவதே நல்ல நெறி.

என்று பெரியோர் கூறியிருப்பதை நாம் மறக்கக்கூடாது. பிறர் இரகசியம் பேசும்போது மறைந்திருந்து கேட்கலாகாது. அன்றியும் இருவர் பேசும்போது அவர் அனுமதியின்றி அச்சம்பாஷணைகளுக்குச் செவிகொடுத்தல் தவறும். வழியிற் போகும்போது நமக்கு முன்செல்பவர்களைக் கைதட்டிக் கூப்பிடலாகாது. ஏனெனில், நாம் எதிர்பாராத வேறுபலர் திரும்பிப் பார்ப்பார்கள். அதனால் நாம் பலரது போக்கைத் தடுக்கிறவர்களாகிறோம்.

பிள்ளைகளே! இப்படிப்பட்ட நல்லொழுக்கங்களைக் கைக்கொண்டு ஒழுகுவீராயின் இம்மையிற் கீர்த்தியும் மறுமையில் நற்கதியும் அடைவீர்கள் என்பது திண்ணம்.

"வஞ்சகமில்லா மனநிலை பழகு: சினந்தவிர்ந்துலகிற் சீரியனாயிரு"

V. S. சர்மா. (261)
J. S. C. வகுப்பு மாணவன்,
உடுவில் தெற்குச் சைவவித்தியாசாலை.

# "தனக்கடாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம்"

ஓர் ஊரிலே ஓர் வீடு இருந்தது. அவ்வீட்டில் ஒழுக்குவிழுந்த மூலையில் ஓர் பலகை இருந்தது. அப் பலகையின்கீழ் ஓர் தாய்த்தவளையும் பல் குஞ்சுத்தவளைகளும் வாழ்ந்து வந்தன. ஒருநாள் அவ்வீட்டு முற்றத்தில சிலர் ஓர் நாடகம் பழகினார்கள். அவர்கள் பழகும்போது தவளைகளெல்லாம் பார்த்துக்கொண் டிருந்தன.

அவர்கள் சென்றதும் அதைப் பார்த்துக்கொண்டிருந்த குஞ்சுத் தவளைகள், தாயைப்பார்த்து "அம்மா இராத்திரி நாடகத்தைப்போல நாங்களும் ஆடுவோமோ" என்று கேட்டன. அதற்குத் தாய்த்தவளை "கிணற்றுத்தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன்" என்று சொன்னது. அதற்குக் குஞ்சுகள் "அம்மாவுக்கு நாகரீகம் தெரியாது" என்றன. அப்பொழுதும் தாய்த்தவளை மறுத்தது. அதற்குக் குஞ்சுகள் "முட்டைக்குள் குஞ்சு நெடுங்காலமிருக்குமோ" என்று கேட்டன. பின்பும் தாய் மறுத்தது. மறுக்க எல்லாக்குஞ்சுகளும் வெளியே வந்தன. பின்பு ஒரு குஞ்சு தாளம்போட, மற்றக்குஞ்சு கூத்தாட, மிகுதியாயுள்ள குஞ்சுகளெல்லாம் பார்த்துக்கொண் டிருந்தன.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த தாய்த்தவளை, தானும் கூத்தாட வேணுமென்று நினைத்து, வெளியே வந்தது. ஓர் தடியை எடுத்துக் கிழக்கூத்தாடிற்று. இது எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த காகமொன்று குஞ்சுத் தவளையொன்றைத் தூக்கிக் கொண்டுபோனது. தப்பிய தவளைகளெல்லாம் ஓடியொழித்தன. 'தனக்கறியாச் சிங்களம் தன் பிடரிக்குச் 'சேதம்.

(206) ஐ - இராசரத்தினம்
சுன்னாகம்





# முருகர் அம்மான்

எங்கள் முருகரம்மமானைத் தெரியுமா? அவர் ஒரு நாதனமான மனுஷன். ஒருநாள் ஒரு படமொன்றை அவருடைய தம்பியார் அவருக்கு அனுப்பியிருந்தார். அதை என்ன செய்வது என்று முருகரம்மானின் மனைவியான எங்கள் மாமி கேட்டா. அதற்கு அவர் "அதை என்னிடங்கொடு. நான் தூக்கவேண்டிய இடத்தைக் கண்டுபிடித்துத் தூக்கிவிடுவேன். அதுஎன்ன ஒரு பிரமாதமான வேலையா? நீ, போ" என்றுவிட்டுப் படம் தூக்கும் வேலையை ஆரம்பித்தார் முதலாவதாய் சால்வையைக் களற்றி வைத்துவிட்டு வேலனைக் கூப்பிட்டு "5 சதத்துக்கு ஆணி வேண்டிக்கொண்டுவாடா" என்று அனுப்பினார். அவன் போனவுடனே வேலைக்காரியைக் கூப்பிட்டு அவளிடம் "இரண்டிஞ்சி நீளமுள்ள ஆணியென்று சொல்லு" என்று அவளையும் அவனுக்குப்பின்னால் அனுப்பினார். பின்பு தன்மகன் நாதனைக் கூப்பிட்டு "ரூல்தடியைக் கொண்டுவா" என்றார். பின்பு மற்ற மகனைக் கூப்பிட்டு "அடுத்த வீட்டிற்போய் மிஸ்டர் ராமுவின் கால் மாறிவிட்டதா என்று கேட்டுவிட்டு, அவருடைய சுத்தியலைக் கொஞ்ச நேரத்திற்கு இரவலாய் வேண்டிக்கொண்டுவா" என்றார். சமயற்காரனைக் கூப்பிட்டு "ஏணியைக் கொண்டுவா அதோடு ஒரு கதிரையும் வேணும்" என்றுவிட்டு, வேலன் வந்தவுடன் படம் தூக்குகிற நாடாக் கயிறு வேண்டவேண்டும்" என்றார். "நாதன்! இந்தப் படத்தை இப்படிக்கொடு பார்ப்போம்" என்று படத்தை வேண்டினார். கை தவறிவிட்டது. பிறேம் வேறு கண்ணாடிவேறாகக் களன்று கீழே விழவும், கண்ணாடியையாவது காப்பாற்றலாமே என்றுநினைத்து கண்ணாடியைப்பிடித்தார். கையில் வெட்டிவிட்டது. இரத்தம் வடிவதைக்கண்ட அம்மான் சால்வையைத் தேடினார். நாங்களும் அவர் உத்தரவிட்ட வேலைகளையெல்லாம் விட்டுச் சால்வையைத் தேடினோம். "என்ன? நான் சால்வையைத் தோழாற் களற்றிவைத்து ஐந்து நிமிஷமாகவில்லை! அது எங்கே தொலைத்து விட்டீர்கள்?" என்று சீறி விழுந்தார். பின்பு அவர் உட்கார்ந்திருந்த கதிரையினின்று எழுந்தவுடன் தான் அதற்குமேல் உட்கார்ந்திருந்ததை அறிந்தார். சால்வையைத் 'தேடினதுபோதும்.ஆறு மடையர்கள்! நான் ஐந்து நிமிஷங்களுக்கு முன் வைத்த சால்வையைத்தேட முடியவில்லை. உங்களைத் தேடக் கேட்பதிலும்பார்க்கத் தெருவிற் போகிற ஒருவனைத் தேடச் சொல்லலாம்" என்றார். பிறகு கையில் ஒரு ஈரத்துணியைச் சுற்றிக்கொண்டு வேறு கண்ணாடியொன்று பார்த்துப்போட்டபிறகு வேலை ஆரம்பிக்க ஒரு மணித்தியாலஞ்சென்றது. கதிரையை இரண்டுபேர் பிடிக்க மற்றவர்கள் சுற்றிவரநிற்க என தோழைப்பிடித்துக்கொண்டு அம்மான் ஏறினார். ஏறி ரூல்தடியை எடுத்து அளந்து ஒரு அடையாளம்போட்டார்; ஆணியை அடையாளம்போட்ட இடத்தில் வைத்து "அடேய்! சுத்தியலை இப்படிக்கொடு" என்றார். சுத்தியலைப் பார்த்தோம் காணவில்லை. அம்மானுக்கு வந்தகோபத்திற்குக் கணக்குவழக்கில்லை. "மந்திகள்மாதிரி வாயைப்பிளந்துகொண் டிருக்கிறீர்களே! இந்தச் சுத்தியலைப் பார்த்தெடுக்க முடியவில்லையா" என்றார். சுத்தியலைப் பார்த்தெடுத்துக் கொடுத்தவுடன் ஆணியைத்தவறவிட்டு விட்டார். அதையெடுக்க நாங்கள் எல்லாருமாய் நாலுகால் குழந்தைகள்போல் தவழவேண்டியதாயிற்று. ஆணியை எடுத்தவுடனே அடையாளம் வைத்தவிடம் எங்கேயென்று அவருக்கே தெரியவில்லை. நாங்கள் எல்லாரும் ஒவ்வொருவராய் ஏறி அவருக்குப் பக்கத்தில் நின்றுபார்த்து ஒவ்வொருவரும் வெவ்வேறிடங்களில் அடையாளங்கள் இருப்பதாய்க்கண்டு பிடித்தோம். "எல்லாரும மடையன்கள் இறங்குங்கள் கீழே!" என்று அதட்டினார். பழையபடியும் அம்மான் ரூல்தடியை எடுத்துக்கொண்டு $33\frac{3}{8}$ அங்குல உயரத்தில் படம் தூக்கவேண்டுமென்று ஞாபகமாய் வைத்துக்கொண்டு ரூல்தடியால் எத்தனை ரூல் அளந்தால் அந்தத்தூரம் வருமென்று அவரும் நாங்களும் கணக்குப்போட்டதில் மண்டைவலி வந்துவிட்டது. கடைசியாக ஒரு நாக்கயிறால் அளந்து ஆணியை அடித்தார். அடிக்கும்பொழுது அம்மானின் விரலும் சுத்தியலுக்கிடையில் அகப்பட்டு நசுங்குண்டவுடன் சுத்தியலைக் கைவிட்டுவிட்டார். நா அதிர்ஷ்டவசமாய் அதுஎன் காலில் விழுந்து நான் ஐயோவென்று கதறினேன். சுவரிலும் சுண்ணம்புப் பூச்சில் ஒரு பாகம் உடைந்து கீழே விழுந்தது. மறுபடி வேறோரிடத்தில் ஆணியைஅடித்து ஒருபக்கஞ் சரிந்தபடி சுவரில் ஒரு ஓட்டையுடனும் பல அடையாளங்களுடனும் ஒருவாறு படத்தைத் தூக்கிவிட்டுக் கீழேஇறங்கும் போது சுத்தியல்விழுந்த அதேவிரலை மிதித்துக்கொண் டிறங்கினார். இறங்கி நின்று அளவற்ற பெருமையுடன் படத்தைப் பார்த்துவிட்டு "இன்னுமொருவரென்றால் ஒருகூலியாள் பிடித்தல்லவோ இந்தவேலையைச் செய்வித்திருப்பார்கள்" என்றார்.

மாமி : "எனிமேல் நீங்கள் ஏதாவது வேலைசெய்தால் நோத்திற்குச் சொல்லிப்போட வேணும் ஒருகிளமைக்கு நான் பிள்ளைகளுடன் பிறந்தகம் போய்விட்டு பின்பு வாறேன்" என்று

அம்மான் : "இந்தப்பெண்களே இப்படித்தான் ஒரு சின்னக் காரியத்தைக்கூட பெரிய பிரமாதப் படுத்தி விடுவார்கள்" என்றார்.

அ. ஜயேந்திரன் ச. எண் 132

# ஈழகேசரி இளைஞர்சங்கம்

அன்பார்ந்த குழந்தைகாள்,

எல்லாப் பிள்ளைகளும் தங்கள் விஷயங்களைப் பிரசுரிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். ஆனால் நூற்றுக்கணக்கான விஷயங்களையும் ஒரே நாளில் எப்படிப் பிரசுரிப்பது? அல்லாமலும் சிலவற்றைத்தானே தெரிந்து பிரசுரிக்கவேண்டும். ஆகையால் தங்கள் விஷயங்கள் பிரசுரிக்கப்படவில்லையென்றால் அதற்காக கடிதம் எதுவும் எழுதிக் கேட்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒவ்வொரு கட்டுரையாளருக்கும் கூடியளவு சந்தர்ப்பமளிக்கப்படும். ஆகையால் தாத்தாவைத் தொந்தரவு செய்யவேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பொழுது போக்குகளைப்பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகக் கடிதமெழுதுகிறார்கள். அனேகர் பழைய முத்திரைகளைச் சேகரிக்கிறார்கள். ஆனால் ஒரு பேதை யெழுதுவதைப் பாருங்கள்: "சிறுகதைகள் வாசிப்பதில் எனக்கு ஆசை அதிகம். 'ஆனந்தவிகடன்', 'சுதேசமித்திரன்', 'ஈழகேசரி கல்வி அனுபந்தம்' முதலிய வற்றைப் படிப்பதில் விருப்பம். தம்பி தங்கச்சியவர்களை அழவிப்பதிலும் எனக்கு ஒரு இன்பம்!"

எப்படிப்பாருங்கள் குறும்பு!

தாத்தா.

## தாத்தாவின் பதில்

அ. தில்லையம்மா (கோப்பாய்) இவ்வளவு விபரீதமாக முடியுமென்று நான் எதிர்பார்க்கவில்லையம்மா! அச்சுக்கூடக்காரரின் கைப்பிழையால் இப்படி சேர்ந்துவிட்டது. அதினாலென்ன, உமது சகபாடிகள் உம்மை ஒரு தனகர்த்தனாகப் பாவிக்கட்டுமே! திருத்தம் போடப்பட்டிருக்கிறது. அடிக்கடி கடிதமெழுதவும். உங்கள் பாடசாலையிலிருந்து பல அங்கத்தவர்கள் சேர்ந்திருக்கின்றனர். இது உங்கள் ஆசிரியர்களின் ஒத்துழைப்பைக் காட்டுகிறதல்லவா?

நா. அரிகரசர்மா (காரைநகர்) கட்டுரை அல்லது கதை எழுதினால் கடதாசியின் ஒரு பக்கத்தில்தான் எழுதவேண்டும். மற்றைப் பக்கம் சும்மா விடப்படவேண்டும். உமது கதை கிடைத்தது. சந்தாப் பணம் எப்பொழுதும் அனுப்பிப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

தெய்வசிகாமணி (பருத்தித்துறை) உமது பாட்டு கிடைத்தது. அதைப்பற்றிப் பின்னர் தெரிவிக்கிறேன். உமது அபிப்பிராயங்களை நான் ஆமோதிக்க முடியாது.

ஒரு நாட்டின் எதிர்காலம் இளைஞர்களில் தங்கியிருக்கிறதென்பது உண்மைதான். ஆனால் பாடசாலையில் கல்விபயிலுங் காலத்தில் மாணவர் அரசியல் விஷயங்களில் கலந்து கொள்ளுதல் தீமையை விளைக்குமென்று காந்தியடிகளும் மற்றும் அறிவாளிகளும் சொல்லியிருக்கிறார்கள். முதலில் நீங்கள் கற்கவேண்டியவற்றைக் கற்றுக்கொண்டு அதன்பின்னர் தான் அரசியல் விஷயத்தில் கலந்து கொள்ளவேண்டுமென்பது பெரிய அனுபவசாலிகளின் அபிப்பிராயம்.

சி. அரசரத்தினம் (உடுவில்) விஷயங்களை இவ்வளவு அதிகமாக எழுதவேண்டாம். தன்பொருளுக்குத் தானே மதிப்புரை கொடுத்தல் அழகல்ல. உற்சாகப்படுத்த வேண்டுமானால் ஆயிரந்தடவையும்!

சீ. நடராசா (உடுவில்) கட்டுக் கணக்காக விஷயங்கள் வந்து குவிந்தால் நானென்ன செய்வது? பத்திராதிபரும் இடங் கொடுக்கவேண்டுமே? ஆகையால் விஷயம் பிரசுரிக்கப்படாவிட்டால் அதைப்பற்றிஎழுதியெழுதிக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டாம். ஆனால் கூடிய அளவில் நல்ல விஷயங்களெழுதும் எல்லாருக்கும் இடந்தரலாம்.

சர்வேஸ்வரசர்மா: இப்படியெல்லாம் திடீரென்று அபிப்பிராயம் கொண்டுவிடக் கூடாது. தம்பீ ஒவ்வொரு அங்கத்தவரும் தத்தம் முறை வருமளவும் காத்திருக்க வேண்டும், தெரிகிறதா? தாத்தா மிகவும் நல்லவர். போபிள்ளைகளைக் கட்டாயம் கவனிப்பார். எல்லாருக்கும் ஒவ்வொரு காலமும் நேரமும் வரவேண்டாமா?

அ. ஜயேந்திரன் (கொழும்பு) உமது கதை, இந்தவாரம் தான் பிரசுரிக்கப்படுகிறது. எல்லாப் பிள்ளைகளையும் கவனிக்க வேண்டியிருப்பதால் காலதாமதம். என்னிடம் பிழையு முத்திரைகள் விசேஷமாக இருந்தவற்றைக் கொடுத்துவிட்டேன். வெளியூரிலிருந்து சில அடுத்தவாரம் கிடைக்கக் கூடும். அப்போது அனுப்ப முயல்கிறேன். யாழ்ப்பாணம் வரும்போது கல்வி அனுபந்தக் கட்டு எடுக்கலாம். பத்திரிகை நீர் குறிப்பிட்ட விலாசத்துக்கு அனுப்பச் சொல்லியிருக்கிறேன்.

சண்முகம் (உடுவில்) உமது கையெழுத்து வாசிக்க முடிகிறதில்லை. விஷயங்களை விளக்கமாகவும் அழகாகவும் எழுதினால் நல்லது. இல்லாவிட்டால் காலதாமதமேற்படுகிறது. பரீட்சையில் நன்றாயெழுதினீரா?

செ. நடராசா (கட்டுவன்) நீர் அனுப்பிய கட்டுரைகள் சிறந்தவா அல்லவா என்று தீர்மானிக்கும் விஷயம் என்னைப் பொறுத்தது! அச்சுக்கூடவேலைகள் உமக்குத் தெரியாது. உமது கட்டுரைகள் அப்படியே இருக்கின்றன.

அ. இந்திராவதி (கொழும்பு) உமது பழைய கடிதமும் கட்டுரையும் ஞாபக மறதியாகக் கிடந்துவிட்டன, இந்தவாரம் தான் எடுத்துப் பார்த்தேன். இந்திரா, நீர் எழுதும் கடிதங்கள் தான் மிகவும் அழகாயிருக்கின்றன. உமது கதை நான் பிரசுரிக்க எடுத்துக்கொள்ளவில்லை. அதற்குக் காரணம் நான் இந்தப் பத்திரிகை வாயிலாக எழுதுவதும் முறையல்ல. ஆகையால் நேரே உமக்கு இந்தவாரம் ஒரு கடிதம் வரும்! வேறோர் கதை எழுதினால் நல்லது.

வே. சின்னையா (உடுவில்) உமது விஷயம் நன்றாயில்லை. அதனால் பிரசுரம் பெறவில்லை.

நா. சிவசுப்பிரமணியம் (தென்மயிலை) என்னிடமிருந்த முத்திரைகளை வேறு சிலருக்கு அனுப்பிவிட்டேன். ஆகையால் கீழே சில அங்கத்தவர்களின் பெயர்கள் பிரசுரிக்கிறேன். அவர்களிடம் நீர் உமது முத்திரைகளிற் சிலவற்றை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம் நீர் கேட்ட விலாசங்கள்: சு. இராமசந்திர ஐயர், சரவணபவானந்த வித்தியாசாலை, கோப்பாய் வடக்கு; ம. க. நடராசா, அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி; வே. சின்னையா, உடுவில் தெற்கு, சைவவித்தியாசாலை, மானிப்பாய்.

(தொடர்ச்சி 341-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்—மயிலிட்டிதெற்கு "திருமகள்நிலைய" த்தி லிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டியி' ஜின்ன திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம் ஆகஸ்ட் 27உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.

Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

# ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றுங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னாகம்: பிரமாதிஸு ஆவணிமீ கஅஉ (3-9-39) { இல. 44

## தேகாப்பியாசக் கல்வி

தேகாப்பியாசத்தின் அவசியத்தைப்பற்றிப் பலவகையான அபிப்பிராயம் நமது நாட்டிலும் பிற நாடுகளிலும் இருந்து வருவது யாவரும் அறிந்ததொன்றாகும். தேகாப்பியாசக் கல்வியில் அதிகம் முன்னேற்றமடைந்த நாடு அமரிக்க ஐக்கிய நாடாகும். சமீபத்தில் அங்கு நடந்த கல்வி மகாநாட்டில் ஆராயப்பட்ட 200 விஷயங்களுள் 66 விஷயங்கள் தேகாப்பியாசக் கல்வி சம்பந்தப்பட்டன. நமது நாடு அமரிக்க நாட்டைப்போல் தேகாப்பியாசக் கல்வி முறையைப் பெறப் பல வருடங்கள் செல்லும்.

1900-க்கு முன் வித்தியாசாலைகளில் சரீரப் பயிற்சி மாத்திரம் இருந்தது. 1910 வரையில் விளையாட்டுக்களும் தேர்ச்சிக்குரியதாகக் கவனிக்கப்பட்டது. 1920 வரையில் ஆறுதலும் கல்வி முறையில் ஓர் முக்கிய அங்கமாகக் கவனிக்கப்பட்டது. 1930 வரையில் சுகாதாரம் கல்வியோடு சம்பந்தப்படுத்தப்பட்டது. தற்போது தேகாப்பியாசக் கல்வியே முதலிடம் பெற்று வருகின்றது.

தேகாப்பியாசக் கல்வி விருத்திக்குப் பெருந்தொகைப் பணச் செலவு செய்வதைக் குறைக்கும் நோக்கத்தோடு, சென்னை அரசினர் செலவை உண்டுபண்ணும் பிறநாட்டு விளையாட்டுக்களைக் குறைக்கவேண்டுமென்ற அபிப்பிராயங் கொண்டிருக்கின்றனர். பிற நாட்டு விளையாட்டுக்களுக்குப் பதிலாகச் சுதேச விளையாட்டுக்களை விளையாடுதல் நன்மை பயக்கும் என்பது அவர்கள் கருத்து.

### பூமிசாஸ்திரக் கல்வி

பூமிசாஸ்திரம் பொதுவாக ஓர் முக்கிய பாடமாகக் கருதப்பட்டு வருகிறது. ஆனால் அப்பாடம் சரியான முறையில் கற்பிக்கப்படுவதில்லை. பூமிசாஸ்திரக் கல்விக்குச் சரித்திரக் கல்வியும் பௌதிக சாஸ்திரக் கல்வியும் இன்றியமையாதது. பூமிசாஸ்திரம், சரித்திரம் முதலிய பாடங்கள் தனிப் பாடமாகப் படிப்பித்தலிலும் ஒன்றோடொன்று சம்பந்தப்படுத்திப் படிப்பித்தல் நலம். (N. S. வேங்கடராமன் M. Sc.)

### கல்வியும் குடியரசும்

உலகத்திற் குடியரசைத் தழைத்தோங்கச் செய்வதற்குக் கல்வி அத்தியாவசியமாகும். கல்விமூலம் ஏற்படுத்தப்படும் அஸ்திவாரமே குடியரசைத் தாங்கவல்லது. (திரு. ரூஸ்வெல்ற்.)

### கல்லூரிகளிற் சுதேச பாஷை

கல்லூரிகளிற் சுதேச பாஷைகள் மூலம் கல்வி கற்பிக்க வேண்டிய முயற்சி சென்னைச் சர்வகலாசாலையினரால் செய்யப்பட்டு வருகின்றது. சமீபத்தில் சென்னைக் கலாசாலைகளுக்கெல்லாம் இது விஷயமாகச் சுற்று நிருபம் விடப்பட்டிருக்கின்றது. ஆசிரியர்கள் யாவரும் இது விஷயமாகத் தங்கள் அபிப்பிராயத்தைக் கூறியபின் சுதேச பாஷைக் கல்வி கற்பிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் கையாளப்படும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

(தொடர்ச்சி 349-ம் பக்கம் பார்க்க)